
# விடுதலைப்புலிகள்

குரல்: 55 பங்குனி 1995 அன்பளிப்பு: ரூபா 5/-

## உள்ளே

* சந்திரிகாவின் சமாதானம் - கட்டுரை
* மீண்டும் பேய் முருங்கில் ஏறுகிறது - கவியுரை
* சந்திரிகா: சமாதான முகமூடி அணிந்த பேரினவாதி? - கருத்துரை
* பூநகரி படைத்தளம் அகற்றமுடியாதது? - விளக்கவுரை
* அல்லைக் குடியேற்றம் - தகவல்
* இந்திய வல்லாதிக்க நோக்கம் - வரலாறு




# மூன்றாவது ஈழப்போர் மூளுமா?

இன்று எல்லார் மனதிலும் எழுந்துள்ள கேள்வி, 'சண்டை தொடங்குமா?' என்பதே. தமிழரின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க மறுத்து சந்திரிகா அம்மையார் எடுத்துள்ள அரசியல் நிலைப்பாட்டுடன், 'அரசு - புலிகள் அமைதிகாண் பேச்சுக்கள்' தோல்வி கண்டுவிட்டன. இதனால், எந்தநேரமும் யுத்தம் மூளலாம் என்ற ஒரு நெருக்கடி நிலை எழுந்துவிட்டது. ஆயினும் சந்திரிகா அரசு தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, இந்த நெருக்கடி நிலையைத் தீர்க்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள தலைவர் பிரபாகரன் அவர்கள், அதற்குரிய கால அவகாசத்தையும் வழங்கி ஒத்துழைத்துள்ளார்.

இந்த நிலையில் 'போரா? சமாதானமா?' என்று முடிவெடுக்கும் அதிமுக்கிய வரலாற்றுப் பொறுப்பு இன்று, சந்திரிகா அம்மையாரின் கைகளிலேயே தங்கி உள்ளது. அவர் யுத்தத்தைத் தேர்ந்தெடுக்கப்போகின்றாரா அல்லது சமாதானப் பேச்சைத் தொடரப் போகின்றாரா? சமாதானப் பேச்சைத் தொடர ஆவன செய்ய வேண்டும் என்பதுதான், தமிழ் மக்களது ஏகோபித்த விருப்பமாகும்!

முன்னைய அரசு தமிழ் மக்கள் மீது சுமத்திய அனைத்துப் பளுக்களையும் இல்லாதுசெய்து, தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நீக்கப் பாடுபடுவேன் என்ற நல்ல செய்தியுடனேயே, சந்திரிகா அவர்கள் ஆட்சிபீடமேறியிருந்தார். ஆனால், உறுதி அளித்தது போல அவர், தமிழரின் நலன்களுக்கு முதன்மை கொடுக்கவில்லை; இராணுவ நலன்களுக்கே முன்னுரிமை கொடுத்துத் தீர்மானங்களை எடுக்க முயன்றார். எனவே, தமிழ் மக்களின் நலனா அல்லது இராணுவத்தின் நலனா முக்கியம் எனத் தீர்மானிக்கும் முக்கிய பொறுப்பும் இப்போது, சந்திரிகா அம்மையார் மீதே சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், சந்திரிகா அம்மையாரை ஆட்சி பீடத்தில் அமர்த்திய சிங்கள மக்கள், இராணுவ நலன்களுக்கு முதன்மை கொடுக்கும்படி அவருக்கு ஆணை கொடுக்கவில்லை என்பதை, சந்திரிகா அம்மையார் கருத்தில் எடுத்து, தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை சிறீலங்காவின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த அனைத்துச் சிங்களத் தலைவர்களும், தமிழர்களின் இனப் பிரச்சினை அமைதி வழியில் தீர்க்கப்பட வேண்டும் என்று, ஆத்மார்த்தமாக எண்ணியதில்லை - அதில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டதுமில்லை. அத்தகைய ஒரு சிந்தனை மரபு சந்திரிகா அம்மையாரையும் தொற்றிக்கொள்ளப் பார்க்கிறது; அதனால்தான், பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில், கடுமையான போக்கை அவர் கடைப்பிடிக்கின்றார்.

ஆயினும், இரத்த ஆற்றை உருவாக்கும் இந்த, எண்ணப் போக்கைச் சந்திரிகா அம்மையார் கைவிட்டு, சமாதானப் பேச்சுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்பதே, தமிழ் மக்களது கோரிக்கையாகும். இராணுவவாதிகளினதும் பேரினவாதிகளினதும் கருத்துக்களுக்கு முதன்மை கொடுத்து, மூன்றாவது ஈழப்போரைத் தொடக்கிவைக்க வேண்டாம் என்று, சந்திரிகா அம்மையாரைக் கேட்டுக்கொள்கின்றோம். **மூன்றாவது ஈழப்போரைத் தொடக்கி வைத்த பெண்மணி** என்ற மகுடத்தைத் தாங்கசந்திரிகா தயாரா?; இல்லையேல் தலைவரின் வேண்டுகோளை ஏற்றுத் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவாரா?

இன்னும் ஒருசில தினங்களில் முடிவு தெரிந்துவிடும்! ○

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# சந்திரிகா குமாரதுங்கா: சமாதான முகமூடி அணிந்த பேரினவாதி?

சந்திரிகா அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில கடந்த மூன்றுமாத காலமாக நடைபெறறுவந்த அமைதிப் பேசசுக்கள் அஸ்தமிகரும் நிலைக்குச் சென்றுவிட்டன. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுடன் நேரடியாகச் சம்பந்தபபட்டுள்ள பொருளாதாரத்தடை நீக்கம் மீன்பிடித்தடை நீக்கம், பூநகரி முகாமை அகற்றி ஒரு பாதை திறப்பது என்பவற்றைச் சந்திரிகா அம்மையார் முழுமையாகவே நிராகரித்ததைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுக்கள் தோல்வியுறும் நிலைக்குச் சென்றுள்ளன.

தமிழ்மக்களின் அத்தியாவசிய-அன்றாடத் தேவைகளான இவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் 'பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும்' என்றும்; எனவே, தேசிய பாதுகாப்பை அரசு விட்டுக்கொடுக்காது என்றும் காரணம் கூறி, சந்திரிகா அம்மையார் அவற்றை நிராகரிதுள்ளார் 09.03.1995 ஆம் திகதியிட்டு தலைவர் பிரபாகரனுக்கு வரைந்துள்ள மடலில், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இவ்விதம் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

தமது அன்றாடப் பிரச்சினைகளையும் அத்தியாவசியத் தேவைகளையும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முனைவது என்பது, சிறீலங்காவின தேசியபாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்ககூடியது என்ற சந்திரிகா அரசின் கருததையே, இது குறித்துக் காடடுகின்றது.

இன்னும் ஒருவகையில் சொல்லப் போனால். வடக்கு- கிழக்கு தமிழ்மக்களின் வாழ்வு என்பது சிறீலஙகாவின் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகமானது என்று சந்திரிகா அரசு பிரகடனப்படுத்தி உள்ளதாகவே, எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. சந்திரிகா அம்மையாரின் அறிவிப்பிலிருந்து ஒரு விடயத்தைத் தெளிவாக அறிந்துகொளளக்கூடியதாக இருக்கின்றது. அது என்னவெனில் உணவு, மருத்துவம், தொழில், பிரயாணம் போன்ற அடிப்படைத் தேவைகளை அரசு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு வழங்கமாட்டாது. ஏனெனில் அவை ''பாரதூரமான இராணுவ விளைவுகளைக் கொடுக்கும்'' என்று அரசு எண்ணுகின்றது.

சந்திரிகா அம்மையார் எடுத்துள்ள இந்த அரசியல் நிலைப்பாடு, ''சிங்கள இனத்தின் பாதுகாப்பிற்கு தமிழர்கள் அச்சுறுத்தலாக உள்ளார்கள்'' என்ற பேரினவாதிகளின் இனவாத சித்தாந்தத்தை நியாயப்படுத்துவதாகவே உள்ளது.

இதன்மூலம், இதுவரை நாளும் சந்திரிகா அம்மையார் அணிந்திருந்த முற்போக்கு முலாம் பூசப்பட்ட சமாதான முகமூடி கழன்று, அவரின் பேரினவாத முகத்தை உலகிற்குக் காட்டிவிட்டது. இராணுவ அணுகுமுறைதான் தமிழர் இனப் பிரச்சினைத் தீர்வுக்குரிய மார்க்கம் என்பதை, சந்திரிகா அமமையார் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

பேச்சுவார்த்தையை அரசு காலங் கடத்திவந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு வழங்கும் அரசின் நேர்மை மீது புலிகள் சந்தேகம் தெரிவித்தே வந்துள்ளனர். புலிகள் வைத்திருந்த சந்தேகம் முழு உண்மை என்பதை, சந்திரிகா அம்மையார் இப்போது நேரடியாகவே நிரூபித்துள்ளார். இதுவரை நாளும் சிறீலங்காவை ஆட்சிசெய்த அனைகது ஆட்சியாளர்களைப் போலவே சந்திரிகா குமாரதுங்காவும் தமிழின விரோத உணர்வு கொண்ட ஒருபேரினவாதிதான் என்பதை, தமிழ்மக்களும் அறிந்துகொண்டுவிட்டனர். இதைச் சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ் மககள் அறிய உதவிய - சந்திரிகா அம்மையார் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய-இறுதிக் கடிதத்திற்கு கோடி நன்றிகள்.

இராணுவத் தலைமையின் அழுத்தத்திலிருந்து தப்புவதற்காக, வேறு வழியின்றி சந்திரிகா அம்மையார் இவ்விதம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என, சில தென்னிலங்கைப் பிரமுகர்கள் நியாயம் கூற முனைகின்றனர். இது சிறுபிள்ளைத்தனமான ஒரு நியாயம் என்பதுடன், இந்த நியாயப்படுத்தல்களின் பின்னால் பேரினவாத சித்தாந்தத்தின் செல்வாக்கும் உள்ளதை எவரும் மறுக்க முடியாது.

இராணுவத் தளபதிகளைக் கடுமையாக விமாசித்து, முப்படைத்தளபதியைப் பதவியிலிருந்து விரட்டி, முன்னாள் தளபதிகள்மீது விசாரணைக்கென ஆணைக் குழுககளை நியமித்துத் தனது அதிகாரங்களைக் காட்டி வந்த சந்திரிகா அம்மையார், தமிழரின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கமுயலும்போது மட்டும் இராணுவத்தைக் கண்டு அஞ்சுகின்றார் என்று சொல்வதை, யார்தான் நம்புவார்கள்?

அத்துடன், போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சந்திரிகா அம்மையாரின் தனிப்பட்ட கொள்கை அல்லவே! சிங்கள மக்கள் கொடுத்த தேர்தல் ஆணை அல்லவா அது? அந்த மக்கள் ஆணைக்கு அவர் என்ன பதில் சொல்லப் போகின்றார்?

ஒரு இராணுவ முகாம், சில அத்தியாவசியப் பொருட்கள், ஒரு மீன்பிடி உரிமை- இந்தச் சின்னஞ்சிறு விடயங்களை நிறைவேற்றினால் ''பென்னம்பெரும் விளைவுகள்'' ஏற்படும் என விளக்கம் அளிக்க முற்பட்டுள்ள சந்திரிகா அம்மையார், தாயக நிலம் பற்றிக் கதைக்கும் போது - தேசியம் பற்றிக் கதைக்கும் போது - தன்னாட்சி உரிமைபற்றிக் கதைக்கும் போது - சிங்கள தேசம் சமுத்திரத்திற்குள் மூழ்குகின்றது என்றல்லவா கூக்குரல் இடப்போகின்றார்! உண்மை இப்படியிருக்க, சிறிய விடயமாகிய அன்றாடப் பிரச்சினைகளை விட்டுவிட்டு, பெரிய விடயமாகிய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதற்கு நாள் குறிக்குமாறு சந்திரிகா அம்மையார் கேட்டுள்ளாரே! சந்திரிகாவின் இந்தசாகச நாடகத்தை இரசித்துத் தலையாட்டுவதற்கு, முன்னைய தமிழ் அரசியல்வாதிகளைப்போல புலிகளின் தலைமை இல்லையே!

தமிழரின் மொழிஉரிமைமீது அவரது தந்தையார் கைவைததுபோல, தமிழரின் கல்வி - வேலைவாய்ப்பு உரிமைகள்மீது அவரின் தாயார் கைவைத்ததுபோல, தமிழர்களின் வாழ்வுரிமைமீது கைவைக்க சந்திரிகா அம்மையார் முடிவு செய்துள்ளார் -

அவரின் தற்போதைய நிலைப்பாடு இதையே புலப்படுத்துகிறைது! ○

## அறப்போருக்கு தலைவர் கொடுத்த மதிப்பு!

ஐந்து வருடங்களாகப் புலிகளிடம் கைதிகளாக இருந்த 14 சிங்களப் போர்க்கைதிகள், தமது விடுதலையை அரசிடம் வேண்டி நடாத்திய உண்ணாவிரதப் போர், அவர்களுக்கு விடுதலையைத் தேடிக்கொடுத்துள்ளது. அந்த விடுதலை அவர்களது அரசின் முயற்சியால் கிடைக்கவில்லை; அவர்கள் நடாத்திய அறப்போர் காரணமாக தலைவர் பிரபாகரன் எடுத்த மனிதாபிமான நடவடிக்கையின் பயனாகவே, அந்த 14 போர்க்கைதிகளுக்கும் விடுதலை கிடைத்துள்ளது.

இதேபோன்று, மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் - நல்லெண்ணத்தை உருவாக்கும் நோக்கிலும், ஏற்கெனவே, பல்வேறு சந்தர்ப்பங்களில் 27 போர்க்கைதிகளை புலிகள்விடுவித்துவிட்டனர். எனவே மொத்தம் 41 போர்க்கைதிகளை புலிகள் இயக்கம் விடுவித்துவிட்டது. ஆனால், புலிகள் செய்த நல்லெண்ண முயற்சிக்கு ஈடாக தனது பக்கத்திலும் எதையாவது உருப்படியாகச் செய்து, இருபகுதியினருக்கும் இடையே நல்லிணக்கத்தைப் பேண, சிங்கள அரசாங்கங்கள் முற்றுமுழுதாகவே தவறிவிட்டன.

சிங்கள அரசாங்கங்களைப் பொறுத்தளவில், தமது படையினரை வெறுங் கூலிப்பட்டாளமாகக் கருதுகின்றனவே அல்லாமல், தமது அரசை அல்லது நாட்டைப் பாதுகாக்க முயலும் மதிப்பிற்குரிய படைவீரர்களைப் போலக் கருதவில்லை. இந்தப் பார்வையை சந்திரிகா அரசும் அப்படியே கைக்கொள்வதைக் காணமுடிகின்றது.

இதேவேளை, போர்க்கைதிகளின் விடுதலை என்பது, போரிடும் இரண்டு பகுதியினருக்கும் இடையில் பரஸ்பரம் செய்துகொள்ளப்படும் விட்டுக்கொடுப்புக்கள் மூலமே நடந்துவருவது உலக வழமை. சிங்கள தேசத்துச் சிறைகளிலுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுவித்தால் அல்லது தமிழ்மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை விலக்கிக்கொண்டால், தாமும் சிங்களப், போர்க்கைதிகளை விடுவிப்பதாகப் புலிகள் கூறிவந்துள்ளனர். அவற்றை அரசு ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. ஆனால், கிழக்கு மாகாணத்தில் கிராமச் சுற்றிவளைப்புகளின்போது கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களைப் புலிகள் என்று கூறி விடுதலை செய்துவிட்டு, தனது படையினரை விடுவிக்க முயலும் மலினத் தந்திரத்தையே அரசு கடைப்பிடிக்க விரும்புகிறது. அநியாயமான முறையில் நடைபெறும் பொதுமக்களின் கைதுகளை, போர்க்கைதிகளின் விடுதலையுடன் ஒப்பிட முடியாது. போர்வேளைகளில் கைதுசெய்யப்பட்ட சிங்கள மீனவர்களை - சிங்களக் குடியேற்றவாசிகளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கூடாக எவ்வித நிபந்தனைகளும் இன்றி புலிகள் இயக்கம் விடுவித்து வருவதை உலகம் அறியும்,

புலிகள் விடுவித்த இந்தப் போர்க்கைதிகள் சிறையில் நோயால் வாடியபோதும், தமது விடுதலையைத் துரிதப்படுத்த உதவும்படி அரசைக் கோரி அறப்போர் தொடுத்தபோதும், சிங்கள அரசாங்கங்கள் அவர்கள் மீது இரக்கம் காட்டவே இல்லை. அகிம்சையை ஆணிவேராகக் கொண்ட பௌத்த மதத்தைத் தமது அரச மதமாகவும் - தமது பண்பாடாகவும் வரித்துக்கொண்ட சிங்கள அரசு, புலிகளிடம் கைதிகளாக உள்ள தனது படையினர் நடாத்திய அகிம்சைப் போராட்டம்மீது அக்கறை காட்ட முன்வரவில்லை.

ஆனால், எதிரிப் படைவீரர்களாக இருந்தாலும், எமது சிறைகளில் இருந்தபடி சிங்களப் போர்க்கைதிகள் நடாத்திய அறப்போருக்கு - அவர்களின் மனைவியர், உறவினர் கண்ணீரால் வரைந்த மடல்களுக்கு - தலைவர் பிரபாகரன் கொடுத்த மதிப்பு, மனிதாபிமானத்துடனும் நல்லெண்ணத்துடனும் மட்டும் சம்பந்தப்பட்டுவிடவில்லை; தமிழரின் உயரிய பண்பாட்டுடனும் அது சம்பந்தப்பட்டுள்ளது. சிங்களப் போர்க்கைதிகளின் விடுவிப்புக்காகத் தமிழினம் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை; ஆனால் தமிழரின் பண்பாட்டை - எமது தலைவனின் நல்லெண்ணத்தை - உலகம் கூர்ந்து நோக்கியபடியே உள்ளது! ○

# சந்திரிகாவின் சமாதானம்!




சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியான காலத்தில் ஒலிவர் என்ற போராளி ஒருவர், ஒரு கருத்துச்சித்திரம் வரைந்தார்; அதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறினார்.

**1956இல் தந்தை பண்டாரநாயக்கா, 1970இல் தாய் சிறீமாவோ, இப்போது மகள் சந்திரிகா; முகம் மாறியுள்ளதேயன்றி அகம் மாறவில்லை. வேர் அதேதான். சந்திரிகாவின் கல்வியறிவை சாதகமான ஒரு அம்சமாகத் தமிழர்கள் பார்க்கின்றார்கள். ஆனால், அவரது பேனாவின் எழுதுமுனை துப்பாக்கியின் சுடுகுழல்தான்; 'மை'க்குப் பதிலாக, அதிலிருந்து கரிமருந்துப் புகைதான் வரப்போகின்றது. ஏனெனில் நிறைந்த கல்வியறிவை வைத்து தமிழர்க்கு நல்வாழ்வு அளிப்பது பற்றி அவர் சிந்திக்கப்போவதில்லை; மாறாக, சமாதானத்தைப் பேசிக்கொண்டு எப்படித் தமிழர்க்குக் கழுத்தறுக்கலாம் என்பது பற்றியே அவர் ஆராய்கின்றார். இதுதான் உண்மை. அவரது ஒரு கைதான் (ஒரு பக்கம்தான்) எமக்குத் தெரிகின்றது. மறு கை என்ன செய்கின்றது? மறுபக்கம் எப்படி இருக்கின்றது? இவற்றை நாம் அறிவோமா? இல்லை! சந்திரிகா ஒரு கேள்விக்குறியேதான். எனினும் நாம் தெளிவோடு இருக்க முடியும் - காலம் காலமாக தமிழனை ஏறிமிதித்த அதே ஆட்சி பீடத்தின் மீது, ஆள்மாறி ஆள் மாறி வந்து, இப்போது சந்திரிகா ஏறியுள்ளார்.**



மேற்படி படம் 'கருத்துப் பிசகு' உள்ளதாக இருக்கலாம் எனக் கருதி நாம் அதை ஒரு கரையில் வைத்து விட்டிருந்தோம். நாட்கள் நகர, சந்திரிகா அரசின் சமாதானத்தொனி குறைந்து, போர் செய்து வெல்வது பற்றி அவர் பேசத்தொடங்கும் போது - 'ஒலிவர்' அவர்கள் இன்னொரு கருத்தோவியம் வரைந்தார். அதை அவர் இப்படி விளக்கினார்.

**''சந்திரிகா அம்மையார் சமாதானப் புறாவைப் பறக்கவிடுகின்றார்!'' - இப்படித்தான் எல்லோரும் நினைப்பர்; நம்பினர். ஆனால், அப்படி அல்ல. வேண்டாமென்று தள்ளி விடும் புறாவை, வேண்டுமென்று பறக்க விடுவது போல் அவர் காட்டுகின்றார். உண்மையில் - சாந்த முகத்தோடு அமைதியாகக் காத்திருக்கும் பிணந்தின்னித் கழுகுதான் அவரது உள்மனக் குறியீடு. மெல்ல அதனை உசுப்பி விடுவாரானால், அது புறாவையும் கொத்தி வீழ்த்தும். சமாதானத்தையும் பிய்த்துக் கிழிக்கும். உண்மையில், மக்கள் நலனை அல்லாமல், இராணுவ நோக்கங்களை முன்னிறுத்திச் செயற்படுவது மட்டுமல்லாமல், படைபலத்தின் பின்னால் நின்று ஆட்சி செய்யவே அவர் விரும்புகின்றார். படைபலத்தைக்கொண்டு தமிழீழத்தை அடிபணியச் செய்து, நினைத்த காரியங்களைச் சாதிப்பதே அவரது உள் நோக்கமாகும்.**

சமாதானத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து அதையும் நாம் பிரசுரிக்கவில்லை. இப்பொழுது, மக்களின் நாளாந்த - அத்தியாவசிய வாழ்வுக்கு இடையூறாய் உள்ள தடைகளை அகற்றிவிடுமாறு கேட்ட புலிகளின் கோரிக்கையை நிராகரித்து, ''அது பாரதூரமான இராணுவ விளைவுகளை ஏற்படுத்தும்'' என சந்திரிகா கூறிவிட்டார். 'ஒலிவர்' தன் கருத்துக்கு உருக்கொடுத்து கடைசி ஓவியம் தீட்டினார். அவரது கருத்து ஒரே வரியிலேயே அடங்குகின்றது.

**அரசியல் வழிமுறையில் அல்ல; சந்திரிகா அவர்கள் இராணுவ வழிமுறையில் தீர்வு காண்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்.**

• • • •



**இலங்கை மணித்தீவில் அத்தனை உள்ளங்களையும் தித்திப்பிலாழ்த்திய பெயர் அது. அரையாண்டுகாலத்திற்கு முன்னால் ஆர்த்தெழுந்த பேரலை ஒன்றின் பெயர் அது. பொங்கிப் பிரவாகித்து தீவு முழுவதையுமே அது தன்னுள் அமிழ்த்தியது. ''யுத்தத்தின் சத்தங்களை நிறுத்தி ரத்தத்தின் வாடையையே போக்குவேன்'' எனக் கேட்ட அசரீரியின் பின்னால் ...... அந்தப் பெயர். ''போரின் வேர்களை அறுத்து, அமைதியை அரங்கில் ஏற்றி, சகஜவாழ்வைச் சமர்ப்பிப்பேன்'' என, அந்தப் பெயர் உரக்க உரைத்தது. போரிற்கு உரமான பெருந்தலைவர்களின் படங்களோடு, ''இவர்களின் துணைவிகளினதும் எனதும் நிலை, இனி இந்தத் தீவின் பெண்குலம் காண விடேன்'' என அது உறுதியளித்தது. வாக்குறுதிகளுக்கு உருகிப்போனதேசம், உலகம் வியக்கும் வாக்குகளை அளித்தது. சனங்களின் அதிபதியாகி, சரித்திரத்தில் பதிந்தது அந்தப் பெயர்.**

அந்தச் சுந்தரப் பெயர்தான் சந்திரிகா. அழகான பெயர். பெயருக்குரியதாக அழகான முகம். நிமிர்ந்த, மிடுக்கான, எடுப்பான தோற்றம் கண்டவர்களைக் கவர்ந்தது: கேள்விப்பட்டவர்களையும் வசீகரித்தது. அன்னவள் அற்புதம் நிகழ்த்தப்போகிறாளென்று தேசம் நம்பிக்கையில் திளைத்தது. சமாதானத் தென்றல் தங்களுக்கு சாமரம் வீசும் நாளினுக்காகச் சிங்கள மக்கள் 'வளிமேல் செவி வைத்து' காத்திருந்தார்கள்.

படித்தவனுக்கு மரியாதையும், கற்றவனுக்கு கௌரவமும் கொடுப்பது தமிழ்ச் சமூகம். சந்திரிகாப் பெருமாட்டியின் கல்விப் பேரழகில் அது தன்னை இழந்தது. உலகெலாம சுற்றிப் பெற்ற உன்னத கல்வி, ஊருக்கு உத்தமம் செய்யப்போவதாக தமிழ்மண் உவகைகொண்டது. படித்தவள்; பலவாறாகவும் சிந்திக்கக்கூடியவள்; நாட்டு நடப்புக்களை நாற்பதாண்டுகளாய்ப் பார்த்தவள்; அனுபவத்தால் ஆராய்ந்தவள்; வன்முறையின் கோரவடுக்களைத் தானும் சுமப்பவள்; படிப்பறிவிலும் - பட்டறிவிலும் புடம்போட்டுப் பக்குவப்பட்டவள். யாழ்ப்பாணத்துப் பெரியார்கள் கூடியிருந்து பேசிக்கொண்டார்கள் - ''பொடிச்சி செய்வாள்!''

ஊருக்கு வெளியில், புளியடிக்குக் கீழ் குந்தியிருக்கும் முதிர்ந்த பழசு மட்டும் வேறுமாதிரி முணுமுணுத்தது; கேட்டவர்கள் சினந்தார்கள் - எரிச்சல் பார்வை பார்த்தாகள். அது சொல்லிக்கொண்டது - ''கொழுக்கட்டையும் மோதகமும் போலத்தான்; உருவம்தான்ரா தம்பி வேற; உள்ளீடு எல்லாம் ஒண்டுதான்.'' ஊரவர்கள் பழசுக்கு பைத்தியம் என்றார்கள். பல்லுவிழுந்த கொள்ளுக் கிழவர் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

ஆறு மாதங்கள் போயின...... ஆறே ஆறு மாதங்கள்.

சமாதானச் சாயம் கரைந்து குள்ளநரியின் வேட்டைப் பல் வெளியில் தெரிந்தது. தமிழன் விழித்துக்கொண்டான்; சந்திரிகாவும் மந்திரிகளும் பேரினவாதத்தின் புத்திரர்களே - தமிழன் உணர்ந்து கொண்டான். பேச்சுவார்த்தை என்பதென்றால் பேய்க்காட்டும் தந்திரமா? இனி அவன் ஏமாறான்; ஏமாந்துபோய் வீழான்; வீழ்ந்து கிடந்து அழான்.

இது 'பிரபாகரனின் காலமாக்கும்!'

# பூநகரிப் படைத்தளமும், சந்திரிகாவும்

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கும் இடையிலானதும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்மையைப் பெற்றுள்ளதுமான இன்றைய ''அமைதிகாண்'' பேச்சுவார்த்தைகள், பூநகரிப் பாதைக்குள் முடங்கிப் போயுள்ளன. சமரசப் பயணத்திற்கு இடையூறாய் உள்ள அடுத்த முக்கிய விடயங்களாக 'பொருளாதாரத்தடை' யும் 'கடல்வலயத் தடை' யும் விளங்குகின்றன.

''பொருளாதாரத் தடையை ஏன் முற்றாக நீக்கவேண்டும்?'' என இன்று எவரும் கேட்க முடியாது. இலத்திரனியல் - பொறியியல்சார் கருவிகளினால் ஆளப்படும் நவ உலகில், எரிபொருளும் மின்சாரமும் இல்லாத எந்தத் தொழில்நுட்பத்தாலும் மிகச் சிறுபயனைக்கூடப் பெறமுடியாது என்பது, சொல்லித் தெரியவேண்டிய சமாச்சாரம் அல்ல; இதற்கு நீண்ட விளக்கங்கள் கொடுக்கவேண்டிய அவசியமும் இல்லை.

இன்னொரு பக்கத்தால் 'கடல் வலயத் தடை' நீடிக்கின்றது. கடலடங்கு சட்டத்தை நீக்குவதாகச் சொல்லிக்கொண்டபோதும், குறிப்பிட்ட சில கடற் பிரதேசங்களில், குறிப்பிட்ட தூர எல்லைகள், குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது; இரவு மீன்பிடி முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.




இராணுவ நிலைகளிலிருந்து 600 மீற்றருக்கு அப்பால் எவரும், எப்போதும், எவ்வாறும் நடமாடலாம் என்ற மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் விதிமுறைகளுக்கு இது முரணானதும்கூட. இந்தக் ''கடற்தடை'' மூலம் கடற்புலிகளின் நடமாட்டத்தை எவ்விதம் கட்டுப்படுத்துகின்றார்கள் என்பது புரியவேயில்லை! யதார்த்தத்தில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்களே தான். இந்த நிலையை எவருமே சுலபமாக விளங்கிக்கொள்வார்கள்; ஏற்றுக்கொள்வார்கள்.

ஆனால், குடாநாட்டுக்கான இராணுவ வாடையற்ற ஒரு தரைவழிப் பாதையைத் திறத்தல் எனும் விவகாரத்தில் எழுந்துள்ள சிக்கலை, சற்று ஆழமாக நோக்குதல் தேவையாக உள்ளது. இந்த விடயத்தில் புலிகள் சற்று 'விட்டுக்கொடுத்து மென்போக்கைக்கடைப்பிடித்தால் என்ன' என்றவாறான ஒரு கருத்தும், சாதுவாக உலாவுகின்றது. ஆனால், அது பற்றிய இருதரப்பு கருத்து முரண்பாட்டைப் பரிபூரணமாக ஆராயும் போதுதான், பூநகரிப் படைத்தளத்தைஅகற்றவேண்டுமென்பதில் புலிகள் விடாப்பிடியாக நிற்பதன் நியாயத்தன்மையை எவரும் உணர்ந்துகொள்ள முடியும்.

இங்கே முதலில் நாம் நோக்கவேண்டிய விடயம் என்னவெனில், பூநகரிப் படைத்தளமானது யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்திற்கு மட்டுமே தடையாக இருக்கவில்லை என்பதேயாகும்; அது, குடாநாட்டில் வாழும் பத்து இலட்சத்திற்கும் குறையாத மக்களின் உயிர் வாழ்விற்கே எச்சரிக்கையாக இருக்கின்றது என்பதையும் விளங்கிக் கொள்ளவேண்டும்; அத்தோடு, சமாதான முயற்சியின் நகர்வோடும் அது பின்னிப்பிணைந்திருக்கின்றது.

முதலில் பூநகரித் தளத்தை அகற்ற அரசு மறுத்து வருவதன் காரணத்தை நாம் தேடுவது நல்லது. அவ்வகையில், ''பூநகரித் தளத்தை அகற்ற முடியாது'' என அரசு இறுக்கமாக இருப்பதன் பின்னணியை நாம் தேடவேண்டுமானால், ''பூநகரித் தளம் ஏன் அமைக்கப்பட்டது?'' என்ற நோக்கத்தை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன்படி - என்ன நோக்கத்திற்காக அந்த முகாம் அமைக்கப்பட்டதோ அதே நோக்கத்திற்காகவே இன்றும் அந்த முகாமை அகற்றாமல் வைத்துக்கொள்வதில் அரசு உறுதியாக நிற்கின்றது என, நாம் கொள்ளலாம்; அதுதான் உண்மையும்கூட.

பூநகரித் தளம் அமைக்கப்பட்டதன் காரணப் பின்னணி எல்லார்க்கும் தெரிந்த சங்கதிதான். யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும் மூலோபாயத் திட்டத்திற்காக - சிங்களப் படைத்துறைத் தலைமை வகுத்த போர்முறைத் தந்திரோபாயத்தின்படி - வளைத்து அமைக்கப்பட்ட முற்றுகை வியூகத்தின் ஒரு பகுதி நகர்வுதான், இந்தப் பூநகரிப் படைத்தளம். குடாநாட்டுப் படையெடுப்பிற்காகக் கையாளப்பட்ட தந்திரத் திட்டத்தில், மிக முக்கியமானதொரு பாத்திரத்தை வகிப்பதுதான் இந்தப் பூநகரிப் படைத்தளம் ஆகும்.

ஆனால் அது, ''பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு'' எனச் சொன்னவர்களின் காலத்தில் - ''இராணுவ வழிமுறையிலேயே தீர்வுகாண முடியும்'' என எண்ணியவர்களின் ஆட்சியில் - வகுக்கப்பட்ட போர்த்திட்டமாகும். ஆனால் இப்போது, ''இனப்பிரச்சினைதான் உண்டு. அமைதிவழியில் மட்டுமே முடிவுகாண இயலும்'' எனப் புதியவர்கள் ஒத்துக்கொள்ளும் போது - முகாமை நீக்குவதில் தடையென்ன? மக்கள் சுகப்பிரயாணம் செய்ய வகை ஏற்படுத்துவதில் பின்னடிப்பதேன்?

எனவே, பூநகரிப் படைத்தளத்தை அகற்றவே முடியாது என புதிய அரசும் விடாப்பிடியாக நிற்பதன் அர்த்தமாக, பழைய போர்த்திட்டம் - செயல் நடவடிக்கைக்காக இன்னமும் காத்திருக்கின்றது என்பதைத்தான் கொள்ள வேண்டியிருக்கின்றது. அதாவது, குடாநாட்டை படையெடுத்து அழிக்கும் நோக்கம் ஒரு போதும் கைவிடப்பட்டுவிடவில்லை என்ற சேதியைத்தான், எமக்குத் தருகின்றது. அப்படியானால், சமாதான சக வாழ்வு என்பது, கலைந்துபோகப்போகின்ற வெறும் கனவுதானா என்கின்ற கேள்வியையும் எம்முள் எழுப்பிவிடுகின்றது.

இதிலிருந்து -

மிகச் சாதாரணமான - பூநகரியில் நிலைகொண்டுள்ள படைகளை வாபஸ்பெற்று, சுதந்திரமான ஒரு போக்குவரத்திற்கே வழி செய்யாத சந்திரிகா அம்மையார் அவர்கள் - மிகப்பெரிய அளவில் குடியிருப்புகளுக்குள் ஆக்கிரமித்து நிற்கும் படைகளை வெளியேற்றி, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே மாட்டார் என, நாங்கள் சந்தேகமற நம்பலாம். சமாதான சகவாழ்வு பற்றிய அவரது வாக்குறுதிகள் எல்லாம் வெறும் வெளிவேடம் என நீங்கள் எவராவது கருதினால், அதில் தவறேதுமில்லை.

இதற்கு மாறாக - உண்மையிலேயே சமாதானத்தை நிலைநாட்டுவதில் சந்திரிகா அம்மையார் இதய சுத்தமான விருப்பத்தைத்தான் கொண்டுள்ளாரெனில், சமரசத்தை உருவாக்குவதைத்தான் தனது ஆத்மார்த்தமான இலட்சியமாக மெய்யாகவே சுமந்துள்ளாரெனில், இராணுவ வழிமுறைகளைக் கைக்கொள்ளும் எண்ணப்பாடு துளியளவிலேனும் அவருக்கு அறவே இல்லையென்பது நிச்சயமானதெனில் -

போரியல் நோக்கமொன்றிற்காக மட்டுமே நிறுவப்பட்ட அந்தப் படைத்தளத்தை விலக்கிக் கொள்வதில் தடையேதுமில்லையே! அமைதிகாண் நெடும் பயணத்தின் முதல் அடியை அங்கு வைத்தே ஆரம்பிக்கலாமே? ஏன் அவர் செய்கிறாரில்லை?

இந்த இடத்தில், விடுதலைப் புலிகளின் கோரிக்கையை சரிவர விளங்கிக்கொள்ளுதல் உகந்ததாய் இருக்கும். அவர்கள் யாழ்ப்பாண மக்கள் போய்வரக்கூடியதாக, 'நிரந்தரமான' ஒரு பாதையையே கோருகின்றார்கள். சுதந்திரமான, நிம்மதியான, பாதுகாப்பானதான என்பதோடு, - நிரந்தரமானதான ஒரு பாதையே தேவை.

'நிரந்தரமான' எனும்போது, அதன் உள்ளடக்கத்தை எவரும் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். சண்டைகள் ஓய்ந்திருக்கும் இப்போதைய காலத்திலென்றாலும் சரி, **அநுருத்த ரத்வத்த** சொல்கின்ற ''அமைதியை ஏற்படுத்துவதற்கான போர்'' ஆரம்பிக்கும் நாளைய காலத்திலும் சரி, மக்கள் எந்தச் சோலியுமில்லாமல் போய்வரவேண்டும். அப்படி போர் தொடுக்கும் எண்ணமெதுவும் அவர்களுக்கு இல்லையெனில், அந்த முகாம் ஏன்? அதனை அகற்றி விடலாம்தானே? அவ்வாறு அகற்றாமல் பாதைக்குப் பக்கத்தில் தான் படைகள் குந்திக்கொண்டிருக்குமென்றால், மீண்டும் யுத்தம் நடாத்தும் நோக்கம் அவர்களிடம் இருக்கின்றது என்று பொருள்; மூன்றாவது ஈழப்போரை ஆரம்பிக்கும் வேளையில், திரும்பவும் பாதை மூடப்பட்டுவிடும் என்று அர்த்தம். அப்படியானால் 'பாதை திறப்பு' என்னவாவது? அதற்கும் மேலாய் 'சமாதானம்' என்னவாவது?

இந்தப் பாதை திறக்கும் விவகாரத்தினூடாகவே நாம் இன்னொரு விடயத்தையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வெளித்தோற்றத்திற்கு - வெளிப்பூச்சிற்கு - ஒரே நாடு என்றும், ஒரே மக்கள் என்றும், தமிழர்கள் எல்லாரும் இந்த ''ஒரே நாட்டின்'' பிரசைகளே என்றும் 'ஐக்கியம்' பேசித்திரிகின்றபோதும், **சந்திரிகா** அம்மையார் அவர்கள், தமிழர்களை அந்நியர்களாகவும் - வேற்று நாட்டவர்களாகவும் - சிங்கள தேசத்திற்குப் புறம்பானவர்களாகவும், வடபகுதியை ஒரு பகைமைத் தேசமாகவுமே கருதுகின்றார்போலத் தெரிகின்றது. அந்தவகையில் - வடபகுதியில் நிலைகொண்டுள்ள தனது அரசுத் துருப்புக்களை, அந்நிய தேசத்தை ஆக்கிரமிக்க அனுப்பப்பட்ட படைகளாகவே அவர் கருதுகின்றார் எனவும் படுகின்றது.

ஏனெனில் - இந்தப் பாதை திறப்புச் சமாச்சாரத்தில் - மக்களின் வாழ்வியல் தேவை பற்றியும் அடிப்படை நலன் பற்றியும் துளியும் கவலைப்படாத அவர், படைகளின் போரியல் தந்திரோபாயங்களிலும் போர்முறைத் திட்டங்களிலும் மட்டுமே அதீத அக்கறையாக உள்ளார்.

முகாமை நீக்கி சமாதானப் பயணத்தின் முதற் படிக்கல்லைத் தாண்டுவதற்குப் பதிலாக, முகாமை நிலைக்கவைத்து, சமரச முயற்சிகளுக்கு அவர் புதைகுழி தோண்டுகின்றார். இந்த இடத்தை நாம் ஊன்றி நோக்குவோமானால் - மக்களுக்குத் தேவையானதை வழங்குவதை விடுத்து, போரொன்றின் மூலம் அவர்களை நிர்ப்பந்தித்து - அடிபணியச் செய்து - தனக்குத் தேவையானதை நடைமுறைப்படுத்தவே சந்திரிகா அம்மையார் நோக்கம் கொண்டிருப்பது தெரிகின்றது.

இப்படியாகப் பலதரப்பட்ட விதங்களிலும் எழக்கூடிய நியாயமான சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, அந்த முகாமை அகற்றிவிடுமாறு அரசைப் புலிகள் இயக்கம் கோரியது; இவ்வாறாக உங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி மக்களுக்குள் நம்பிக்கையின் வித்தை விதையுங்கள் எனக் கேட்டது. இதன்மூலம், மக்களுக்கு நிம்மதியையும் ஆறுதலையும் அளிப்பதுடன், அவர்களுக்குள் நம்பிக்கையையும் முகிழ்க்கச் செய்யலாம் எனவும் விளக்கியது. எனினும் - அரசிடம் நற்சிந்தனைகள் எதுவும் இருப்பதாகத் தெரியாத அதே நேரத்தில், மேற்சொன்னவிதமாக போரியல் உள்நோக்கங்களே இருப்பதாகத் தெரிகின்றது.

பூநகரிப் படைத்தளமானது - இப்போது - வெறுமனே ஒரு பாதைவிவகாரம் அல்ல; குடாநாட்டுப் படையெடுப்போடு மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு இராணுவ விவகாரமும் அல்ல. ''பொருளாதாரத் தடை''யும், ''கடல்வலயத் தடை''யும் தனியே அன்றாட அத்தியாவசியப் பிரச்சினைகளாக மட்டும் இப்போது காணப்படவில்லை. அதற்கும் மேலாக - எமது பார்வையில் - அவை சந்திரிகா அம்மையாரின் ஆழ்மனக் குறியீடு; அவர் என்ன செய்வதற்கு உத்தேசித்துள்ளார் என்பதைக் காட்டும் முன்னுதாரணம்; அவரது உள்நோக்கம் என்ன என்பதைப் பிரதிபலிக்கும் எடுத்துக்காட்டு; ஒட்டுமொத்தமாக - சமரசப் பேச்சுக்களின் போக்கைத் தீர்மானிக்கப் போகும் நிர்ணய சக்திகள்.

• • •

(9 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் கொத்திப் பேய் சொத்தி முருங்கில் ஏறுகிறது

போலிச் சாமியின் காவி வேட்டி
சாயம் கரைகிறது.
குரங்கு போட்டிருந்த மனித முகமூடி
கழன்று விழுகிறது.
சமாதானச் சங்கின் சுருதி கலைகிறது.
மீண்டும்...
''கொத்திப் பேய்
சொத்தி முருங்கில் ஏறுகிறது.
இனிக் கத்தும்.
கல்லாலெறிந்து சண்டைக் கிழுக்கும்.
வெள்ளைக் கொடிக்கு,
கொள்ளைக் காரர்கள் குருதி பூசுகின்றனர்.
கொம்பு சீவிய ''சிங்கக் காளைகள்''
சண்டைக்குத் தயாராகி விட்டனர்.
புலுமச் சிலந்திக்கும், நட்டுவக்காலிக்கும்,
பிறந்த புடையன் பாம்பின் ..
நச்சுப்பற்கள் நமக்குத் தெரிகிறது.
சாந்த சொருபத்தின் சுயரூபம்
''ட்ரகுலா'' பற்களுடன் கூடிய கோரமுகம்.
''எல்லாம் முடிஞ்சது தன்னானே
இனித் திருக்கையும் நெய்யும் தின்னானே.''
நல்ல பழமொழி. நமக்கும் பொருந்தும்
கூத்துக்காரர் ஒப்பனையைக் கலைத்து
உண்மை முகத்தை உலகுக்குக் காட்டினர்.
நன்றி:
''ஒரு பொல்லாப்பும் இல்லை

## உலைக்களம்

**வியாசன்**

எல்லாமும் எப்பவோ முடிஞ்ச அலுவல்''
''தேரடிச்சாமி'' தீர்க்க தரிசி
நாங்கள்,
ஆராதித் தட்டில் குங்குமம் கரைத்து
வாசலுக்கழைத்து வரவேற்பளித்தோம்.
வந்திறங்கிய விமானப் பல்லக்கில்
புழுதிபடிந்தபோது கூட
முத்தத்தாற்தானே ஒத்தியெடுத்தோம்.
உங்களுக்கு பாதம் நோகுமென்று
பஞ்சினால் அல்லவா பாதை சமைத்தோம்.
தலைவனெழுதிய 'சமாதான ஓலையை'
வெள்ளைப் புறாக்கள் எடுத்து விரைந்தன.
தங்கையிடம் தமிழீழமா கேட்டோம்?
இல்லையே
ஒற்றையடிப் பாதை ஒன்றையே கேட்டோம்.
வயிற்றுப் பசிக்கு வலைவீசக் கேட்டோம்.
இறைத்துப் பயிர் செய்ய எரிபொருள் கேட்டோம்.
சலுகைகளைக் கூடத் தரமறுப்பவர்களிடம்
உரிமைகளை எப்படி எதிர்பார்க்கலாம்.
தெற்கில் தேர்தல் திருவிழாவின் போது
'சின்ன மேளம்' சிரித்துக் கொண்டது
பக்க வாத்தியங்கள் 'பல்லவி' வாசித்தன.
'சொர்ப்பன சுந்தரி'யின் நயன பாஷையை
இங்கும் சிலர் 'அற்புதம்' என்றனர்-
வளையலோசையில் வசமிழந்தனர்.
பலருக்கு பழையது மறந்து போனது
இன்று;
உண்மை முகத்திலடிக்கும் போது,
அம்மாவும், அம்மம்மாவும்
சும்மா என்பது தெரியவந்தது.
புத்தனுக்கு 'அரச நிழலில்' ஞானம் விடிந்தது.
தமிழனுக்கு 'அனுபவ நிழலில், அறிவு பிறந்தது.
இனி என்ன செய்வது?
எடுத்த காவடியை இறக்கியே தீர வேண்டும்.
போரென்றால் போரென்றான் 'பழைய கிழவன்'
பேச்சுவார்த்தை முறிந்தால்
போரென்றான் 'புதிய கிறுக்கன்'
இது தமிழர் மீதான போர்ப் பிரகடனம்.
தமிழனே என்னடா செய்யப் போகிறாய்?
கழற்றி வைத்த போருடையை
எடுத்து மாட்டு......
வீர வாளுக்கு வேலை வந்து விட்டது,
கசாப்புக்கடை மேசையிற்கூட
கருணை பிறக்கலாம்.
பேச்சுவார்த்தை மேசையில் மட்டும்
உரிமை கிடைக்காது.
இது புதிய வேதம்.
அனுபவம் தந்த ஆய்வின் முடிவு.
மட்டக்களப்பில் சுற்றி வளைப்பு.
தலைநகரில் தமிழர் கைது.
பொன்னாலைக் கடலில் போனவர் கைது.
வவுனியாவில் புதிய கெடுபிடி,
என்ன இது?
கையெழுத்திட்ட ஒப்பந்தம் என்னாச்சு?
கண்காணிப்புக் குழுவின் கண்களில்
கறுப்புத்துணியா கட்டியிருக்கிறது?
பெரிய அளவில் தொடர்கிறது தமிழர்வதை.
எப்படிப் பொறுக்கலாம்?
புலிகள் பேச்சுக்குப் போனதை
இழிவாகக் கருதியா இந்த எடுத்தெறிவு?
'பலவீனப் பட்டதாலேதான் பணிவு'
என்று நினைத்தா இந்த உதாசீனம் ?
பிரபாகரனின் கவச குண்டலத்தை
எந்தக் 'குந்தி'யும் வந்து எடுத்துப் போகவில்லை
ஆயுதப் போரில் அலுப்புத்தட்டி
தந்ததை வாங்கித் தலைகுனிந்து கொள்ள
பிரபாகரன் 'அரபாத்' இல்லையென்பதை
அலரிமாளிகைக்கு அறிவித்துக் கொள்கிறோம்.
கரும்புலியணியைக் கலைத்து விட்டோமென்று
அவர்களுக்கு
கனவிற் சொன்ன கடவுள் யார்?
ஏறிமிதிக்கும் இளம்புலி வீரரை
வேறு வேலைக்கா விட்டுள்ளோம்?
மூச்சுக்காற்றே நெருப்பு மூட்டும்
பெண்கள் படையணி,
கண்ணுக்கு மைபூசியா காலத்தைக் கழிக்கிறது?
கடற்புலிகள் அரிசி ஏற்றிக் கொண்டு
அமெரிக்காவுக்கா போய்விட்டார்கள்?
இல்லையே.
போருக்குத் தயாராக
சீருடையிற்தானே திரிகின்றனர்.
தங்கைச்சி தப்புக்கணக்குப் போட்டுவிட்டாள்.
ரத்வத்தை குடிப்பதற்கு ரத்தமா தேவைப்படுகிறது?
அட பாவீ மனுஷா!
முந்தியிருந்த மந்திரிகள் முணுமுணுப்பது
அனுருத்தவின் காதுகளை அடைவதில்லையா?
தங்கையே!
ஈழத்தமிழரை
உன் 'அப்பன்' அடக்க நினைத்தபோது
காவி முகத்திடலில் சத்தியாக் கிரகம்,
தமிழரை
உன் 'ஆத்தாள்' அழிக்கப் புறப்பட்டபோது
துப்பாக்கிப் போர் வேர்பிடித்தது.
இன்று உனக்கும் அந்த நினைப்புத்தானா?
எச்சரித்துக் கொள்கிறேம்.
புயலடிக்கும்.
பூகம்பம் வெடிக்கும்.
மின்னல் வெட்டி முழக்கம் பிறக்கும்.
பொங்கிப் பிரவாகிக்கும் போராட்ட நதியின்
கரையெங்கும்
நீங்கள் சருகாய் ஒதுங்குவீர்.
சின்னக் காற்றுக்கே கிளை முறிந்துபோக
தமிழன்
உன் வீட்டுக் கிணற்றடியிலுள்ள ஈரப்பலா அல்ல.
இது வைரப்பனைகள் வளர்ந்துள்ள பூமி
புயலைப் பார்த்து பனைகள் புன்னகைக்குமே தவிர
தலையைக் கவிழ்ந்து சரிந்து விழமாட்டாது.
தங்கையே!
தமிழர் கரும்பனைகள் என்பதை
கணனில படுமிடத்தில் குறித்துக்கொள்.
போர்க்களத்திலா சந்திக்க விரும்புகிறாய்?
என்ன செய்வது?
சத்தியத்துக்காக நாங்கள் கத்தியை எடுக்கின்றோம்.
தர்மத்துக்காக நாங்கள் தேதி குறிக்கின்றோம்
தலைமுறைக்காக நாங்கள்
விலைகொடுக்கப் புறப்படுகின்றோம்.
தர்மம் வெல்லும்.
சத்தியம் வெல்லும்.
சம்பவாமி யுகே! யுகே!!

# இராஜதந்திரிகளின் விஜயம் நற்பயனை தரவேண்டும்

## நம்பிக்கையோடு காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு சர்வதேசம் தரப்போகும் பிரதிபலிப்பு என்ன?

உலகின் முன்னணி நாடுகள் பன்னிரண்டிலிருந்து, அவற்றின் ராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமையானது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்தில் கவனத்திற்குரிய ஒன்றாக முதன்மையைப் பெற்றுவிட்டதையே காட்டுகின்றது.

அமெரிக்காவினதும், அமெரிக்காவை அனுசரித்த வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டதுடன் மறைமுகமாக அமெரிக்காவின் தலைமையின் கீழானவையுமான நாடுகளினதும் ராஜதந்திரிகள் வந்து போனமையானது, உலகில் புறம்தள்ளி வைக்கமுடியாத ஒன்றாக -அலட்சியப்படுத்திவிட முடியாத ஒன்றாக - தமிழ் மக்களின் போராட்டம் மேல்நிலை அடைந்துவிட்டதையே குறிக்கின்றது.

அமெரிக்காவுடன், ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், சுவீடன், நோர்வே, டென்மார்க், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, கனடா, அவுஸ்திரேலியா, பின்லாந்து ஆகிய மேற்குலக நாடுகளினுடைய ராஜதந்திரிகளினது இந்த விஜயத்தை, மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவிற்குத் தலைமை வகிக்கவென வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உடன்பட்டு வந்ததோடு சேர்த்துப் பார்க்கையில் -

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை அனைத்துலக அங்கீகாரத்துக்குரிய ஒரு அரசியல் விடுதலைப் போராட்டமாக சர்வதேசம் இப்போது கணித்துக் கொண்டு விட்டதாகவே தெரிகின்றது.

எனினும் இத்தனை ஆண்டு காலமாக, மிகக் கொடூரமாகத் திணிக்கப்பட்ட நிறுத்தமற்ற போரினால், நாங்களும் எங்கள் மண்ணும் வதங்கிக்கொண்டிருந்தபோது இவர்கள் வந்து பார்க்காமல்விட்டது துரதிர்ஷ்டமான ஒன்றுதான். கொழும்பின் ஆட்சியாளர்களும், செய்திப் பரப்பு கைத்துறையின் பேரினவாத சாதனங்களும் வெளியிட்ட உண்மைக்குப் புறம்பான - திரிபுபடுத்தப்பட்ட - தகவல்களைக் கேட்டுக் கொண்டு அல்லது நம்பிக்கொண்டு எல்லாரும் இருந்துவிட்டமை கவலைக்குரிய ஒன்றுதான். எங்கள் வாழ்விடங்களை விமானக் குண்டுகளும், எறிகணைகளும் சின்னாபின்னமாக்கியபோது -கும்பல் கும்பலாக எங்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது - அந்த இன்னல்களையும் அவலங்களையும் அவர்கள் நேரடியாக வந்து தரிசிக்கத் தவறியது, எங்களுக்கு மன வருத்தமான ஒன்றுதான்.

இருந்தாலும்கூட, \மேற்குலகின் பிரதிநிதிகள் இப்போதாவது எம்மைத் தேடிவந்து பார்த்துப் போனமை எமக்கு ஓரளவு நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தருவதாக உள்ளது. இவர்களது வருகைக்கு ஏற்பாடுசெய்த சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்.

இந்த அனைத்துலக ராஜதந்திரிகளுடன், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இரண்டுமணி நேரம் பேசினார்கள். விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் பற்றியும், விடுதலைப் புலிகளின் - தமிழ் மக்களின் - நிலைப்பாட்டினையும், அந்தநிலைப்பாட்டிலுள்ள நியாயத் தன்மையையும், சமாதானப் பேச்சுக்களில் சந்திரிகா அரசு காட்டும் அக்கறையின்மையையும் புலிகளின் சார்பில் **அன்ரன் பாலசிங்கம்** அவர்கள் தெளிவாக எடுத்து விளக்கினார்.

சமரசப் பேச்சுக்கள் இன்று மந்தமடைந்துவிட்டன. இதற்கான



முழுப்பொறுப்பும் **சந்திரிகா** அரசையே சேருகின்றது. பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறாக - தடங்கலாக -புலிகள் எப்போதுமே இருக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கான அரசதரப்புப் பிரதிநிதிகளை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். இதேவேளையில் அரசாங்கம், புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்கையானது எந்த வகையிலும் ஒத்துவரமுடியாத ஒன்றாகும். பொருளாதாரத் தடை நீக்கப்படாமலும், போக்குவரத்துப் பாதை திறக்கப்படாமலும், புனர்நிர்மாணம் அபிவிருத்தி என்பன நடைமுறைக்குச் சாத்தியமே இல்லாத - ஏட்டளவில் மட்டுமே இருக்கக்கூடிய - ஒரு விடயம். அன்றாடத் தேவைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் தடைசெய்யப்பட்டுள்ளதால் - பற்றாக்குறை நிலவுவதால் - மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டு நெருக்கடிக்குள் சிக்குண்டு கிடக்கின்றார்கள். உதாரணமாக, யாழ்ப்பாணத்துக்கு இரண்டு பெரிய மின்னாக்கிகள் (Generator) அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் - அவை பாவிக்கப்பட்ட பழையவைஎன்பது ஒருபுறம் போக - அவற்றை இயக்குவதற்கு எரிபொருள் இல்லை. எரிபொருள் அனுப்பப்படாத - தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் - அவற்றால் எந்தப் பயன்பாடுமே கிடையாது; வெறும் இரும்புகள் தான்.

புலிகளின் பிரதிநிதிகள் இந்த விடயங்கள் குறித்து, ராஜதந்திரிகளுக்குப் பரிபூரணமாக விளக்கமளித்தனர்; அவர்கள் எழுப்பிய சந்தேகக் கேள்விகளுக்கு நேர்த்தியான பதில்களையும் வழங்கினர். சந்திரிகா அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து, உண்மைக்கு மாறான செய்திகளையே சொல்லுகின்றது என்பதையும் புலிகள் நிரூபித்தனர். அத்துடன் - பல இடங்களைச் சென்று பார்த்தும், பலபேரைச் சந்தித்துப் பேசியும் யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டனர். அத்தோடு இங்கே சொல்லிக்காட்டவேண்டிய விடயமாக இருப்பது என்னவெனில், தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக **மாநில சுயாட்சி உடைய சமஷ்டி கூட்டாட்சி அமைப்பு** முறைக்கு குறையாத ஆட்சியுரிமையைக் கருதும் மேற்குலக ராஜதந்திரிகள், தமிழ் மக்களின் **தன்னாட்சி உரிமை** கேட்கும் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டனர்.

இதேவேளையில் - பெருந்தொகையான வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் தமிழ்ப் பகுதிகளுக்குப் படையெடுத்துக் கொண்டிருக்கின்றமையையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. உலகின் முன்னணி நாடுகளிலிருந்து வருகின்ற இந்தச் செய்தி பரப்பாளர்கள், அந்தந்த நாட்டு அரசுகளுக்கு நெருக்கமான தகவற்துறை நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளார்கள். தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து - பல்வேறு இடங்களையும் நேரில் தரிசித்து - நிலைமைகளை உற்று அவதானித்து, பலதரப்பட்டவர்களையும் சந்தித்து உரையாடி யதார்த்த நிலையை விளங்கி உணர்ந்து கொண்டு செல்லும் அவர்கள், ஏடுகளில் எழுதும் நீண்ட விவரணங்கள், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பானவையாக உள்ளன என்பது ஒரு முக்கியமான விடயமாக உள்ளது.

சுவிற்சர்லாந்துச் செய்தியாளர் ஒருவர் தமிழ்ப் பகுதியைக் கண்டு அதிசயிக்கின்றார். ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஏராளமான இடங்களுக்குச் சென்று வந்த அவர், கொழும்பு உட்பட தான்பார்த்த அநேக நகரங்களை விட வடபகுதி சிறந்து விளங்குவதாக வியக்கின்றார். புலிகள் இயக்கத்தின் ஆட்சித்திறன் மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடும்படியாக உள்ளதாக அவர் ஆச்சரியப்படுகின்றார். வாழ்வின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் குலையாமல் பேணுகின்ற, சட்டம் ஒழுங்கு முறையை மீறாமல் கடைப்பிடிக்கின்ற, சுற்றுப்புறச் சூழலை மாசடையாது பராமரிக்கின்ற இந்த மக்களின் வாழ்வு தன்னால் நம்பமுடியாதுள்ள சிறப்பு என்கின்றார். இங்கு வரும்போதுதான் கற்பனைசெய்துகூடப் பார்த்திராத வகையில் மக்களது வாழ்வுநிலை திகழ்வதாக அவர் பிரமிக்கின்றார்.

இவ்வாறாக இங்குவந்துபோன மேற்குலக ராஜதந்திரிகளும், தகவற்துறையாளர்களும் உண்மை நிலையைத் தெளிவாகப் புரிந்துணர்ந்து சென்றுள்ளதையிட்டு, தமிழ் மக்கள் பெருமகிழ்ச்சி கொள்வதுடன் - இந்தப் பயணங்கள் எல்லாம் தமக்கு நல் விளைவுகளையும், நற்பயனையும் அளிக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள்; தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடுகளின் அரசுகளுக்கு உண்மை நிலையை இவர்கள் தெளிவுபடுத்தவேண்டுமென வேண்டுகின்றார்கள். அதனடிப்படையில், அந்தந்த நாடுகளும், சிறீலங்கா அரசுடனான தமது அணுகுமுறைகளை ஒழுங்கமைத்துக்கொள்ளும் என நம்புகின்றார்கள்.

அந்த நாடுகள் இவ்விடயத்தில் பிரதானமாகக் கவனிக்கவேண்டியது சிறீலங்காவிற்கான நிதி மற்றும் வேறு உதவிகள் வழங்கலையாகும். தமிழ்ப் பகுதிகளின் புனரமைப்புக்கெனவும், பொருண்மிய மேம்பாட்டிற்கெனவும் நிதி மற்றும் வேறு உதவிகள் செய்வதற்கு முன்வந்துள்ள இந்த நாடுகள், அபிவிருத்திக்கான சூழ்நிலை இங்கு பிறந்துவிட்டதா என்பதை முதலில் சரியாக அவதானித்த பின்னர் அதனை வழங்குவதே உகந்ததாகும். அத்தோடு, கொடுக்கப்படும் நிதி தனக்குரிய இலக்கை முழுமையாகச் சென்றடைகின்றதா என்பதை உற்றுக் கவனித்தபடியும் இருக்கவேண்டும். வழங்கப்படும் உதவியின் சிறு பகுதியேனும் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த இடமளிக்காமல் தடுப்பதில், அந்தந்த நாடுகள் அதீக அக்கறை காட்டவேண்டும். இவ்வாறான அக்கறையும், கவனிப்பும் தேவையானதாகவே உள்ளன.

இதேசமயத்தில், சிறீலங்காவின் பொருளாதார அபிவிருத்திக்கென- தமிழர் பகுதிகளுக்கு என வரையறுக்கப்படாமல் - பொதுவில் வழங்கப்படும் பணத்திலும் அந்த நாடுகள் அவதானமாக இருக்கவேண்டும். அந்தப் பணமானது, தமிழர்களுக்கு எதிராக - தமிழர் வாழ்வுக்குக் குந்தகமாக - தமிழர்களின் நலன்களுக்குப் பங்கம் விளைவிப்பதாகப் பயன்படக்கூடிய தன்மை நிலவுமெனில் -

அந்தப் பணம், மற்றும்வேறு வழி உதவிகளை நிறுத்திக்கொள்ளவோ, அல்லது வெகுவாகக் குறைத்துக் கொள்ளவோ அந்தந்த நாடுகள் சித்தமாக இருக்கவேண்டுமென, தமிழீழ மக்கள் வேண்டிக் கொள்கின்றார்கள்.

## பாம்புகள்

*பாம்பு தோலைக் கழற்றி வைத்து விட்டுப் புறப்பட்டது.*
*ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த பக்கம் அது போனது.*

*அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் 'அதோபார்... பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாம்பு - பல்பட்டாலே போதும ...' எனறு கூறியது சேவல்.*

*'அப்படி ஒன்றும் நடந்துவிடாது...... பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது......' என்றது தனியன ஆடு.*

*சிறிது நேரத்தில -*

*ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது.*
*ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின.*

*அங்கே -*

*பாவம்...... அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன.*

*சேவல் சொல்லியது:*
*'பல்லைக் கழற்றாத பாம்பு*
*தோலைக் கழற்றி என்ன?*
*வாலைக் கழற்றி என்ன?'*

- காசி ஆனந்தன்

# அல்லைக் குடியேற்றத் திட்டம்

திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதியினைச் சிங்கள மயமாக்கும் நோக்கத்துடன், இம் மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தினை மேற்கொண்ட சிறீ லங்கா அரசாங்கம், அதேகாலப் பகுதியில் (1949/50), மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் நடைமுறைப்படுத்திய குடியேற்றத் திட்டமே **அல்லைக் குடியேற்றத் திட்டமாகும்**. திருக்கோணமலை மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில், கொட்டியார்பற்று என்ற காரியாதிகாரிப் பிரிவில் உள்ள அல்லைக் குளத்தினை மையமாக வைத்தே, இக்குடியேற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் குடியேற்றத் திட்டத்தில் முதற்தொகுதியாக 118 குடும்பங்கள் 1952 ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் 18 குடும்பங்கள் மட்டுமே திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவை ஆகும். மிகுதி 100 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு இக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டன. 1953ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதியாக 409 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் அரைப்பங்கிற்கும் மேற்பட்டவை சிங்கள மாவட்டங்களிலிருந்து இங்கு குடியேற்றப்பட்டவையாகும். 1954 ஆம் ஆண்டு, மூன்றாவது தொகுதியாக 500 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் 204 குடும்பங்கள் திருக்கோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்தவையாயும், மிகுதி 296 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களைச் சேர்ந்தவையாயும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, 1952 - 54 இடைப்பட்ட மூன்று ஆண்டு காலப்பகுதியில், அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் மொத்தம் 1027 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இவற்றில் ஏறத்தாழ 650 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு இப்பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டன. இக்காலப்பகுதியில் அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு, 3334 ஏக்கர் நெல் வயலும் 1027 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 4361 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதன் பின்னர் 1961ஆம் ஆண்டு வரையில் புதிதாக இக்குடியேற்றத் திட்டத்தில் குடும்பங்கள் குடியமர்த்தப்படவில்லை. மாறாக, ஏற்கெனவே குடியேறியிருந்த குடும்பங்கள் தொடர்ந்து அங்கு நிரந்தரமாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதில், அரசாங்கம் கவனம் செலுத்தியது. 1956ஆம் ஆண்டு, அல்லைப் பிரதேசத்தில் ஒரு பௌத்த விகாரை அமைப்பதற்கு அரசாங்கத்தினால் நிலம் ஒதுக்கப்பட்டது. 1961 - 62 காலப்பகுதியில் அல்லைக் குளத்தின் வலது கரைப் பிரதேசத்தில் 500 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு, 1500 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.


## கொட்டியார்பற்று காரியாதிகாரிப் பிரிவு சனத்தொகை

| ஆண்டு | சனத் தொகை | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1871 | 3740 | - |
| 1881 | 4764 | 27.4% |
| 1891 | 5441 | 14.2% |
| 1901 | 7018 | 29.0% |
| 1911 | 8236 | 15.3% |
| 1921 | 9367 | 13.7% |
| 1931 | 10855 | 15.9% |
| 1946 | 13637 | 25.6% |
| 1953 | 21292 | 56.1% |
| 1963 | 32021 | 53.4% |
| 1971 | 42471 | 32.6% |
| 1981 | 60227 | 41.8% |

கொட்டியார்பற்று என்ற காரியாதிகாரிப் பிரிவில் உள்ள அல்லைக் குளத்தினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் விளைவாக, 1946 - 63 காலப்பகுதியில், கொட்டியார் பற்று காரியாதிகாரிப் பிரிவின் சனத்தொகை வேகமாக அதிகரிக்கலாயிற்று. 1946 - 63 காலப் பகுதியில் இப்பிரதேசத்தின் சனத்தொகை, 13637 பேரிலிருந்து 32021 பேராக- அதாவது 135 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அல்லைக் குடியேற்றத் திட்டத்தின்மூலம் இப்பிரதேசத்தில் பெருமளவு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, கொட்டியார்பற்று காரியாதிகாரிப் பிரிவு மூதூர், சேருவல என இரண்டு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

அரிப்பு என்ற பெயரினையுடைய இடம் சேருநுவர என்று மாற்றப்பட்டு, சேருவல என்ற சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது. 557 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புடைய கொட்டியார்பற்றுப் பிரிவில் உள்ள 176 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு, மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும், மிகுதியாகவுள்ள 381 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் அறிவிக்கப்பட்டது. இப்பிரதேசத்திலுள்ள பல தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. கல்லாறு - சோமபுர என்றும், நீலப்பனை நீலப்பொல என்றும், பூநகர் - மகிந்தபுர என்றும், திருமங்கலை- சிறிமங்கலகம என்றும் மாற்றப்பட்டன. அதுமட்டுமன்றி தெகிவத்த, லங்காபட்டுன, புலத்திகம போன்ற புதிய சிங்களக் கிராமங்களும் இப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டன.

இன்று சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று அழைக்கப்படும் பிரதேசத்தில், 1901ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி மொத்தம் 910பேர் வாழ்ந்தனர். இவர்களில் 80 பேர் மட்டுமே சிங்களவர்களாவர். இவ் 80 பேரில் 77 பேர் வெருகல் என்ற கிராமத்திலும்; ஈச்சிலம்பத்தை கிராமத்தில் ஒருவரும், வாழைத்தோட்டம் என்ற கிராமத்தில் ஒருவரும், சேனையூர் கிராமத்தில் ஒருவரும் வாழ்ந்தனர். இந்த 80 சிங்களவர்களும் இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் அல்லர்; 1901ஆம் ஆண்டு வெருகல் கிராமத்தில் 77 சிங்களவர்கள் இருந்தனர். ஆனால் 1921ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது, வெருகல் கிராமத்தில் ஒரு சிங்களவரும் இருக்கவில்லை. 1901ஆம் ஆண்டு இப் பிரதேசத்தில் இருந்த 80 சிங்களவர்களும் ஆண்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது; இவர்கள் அனைவரும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். எனவே இந்த 80 சிங்களவர்களும் பிற மாவட்டங்களிலிருந்து மீன்பிடித்தொழிலுக்காக இங்குவந்து குடியேறியவர்கள். தொழிற்காலம் முடிந்தவுடன் இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவது வழக்கம். எனவே, சிங்களவர்கள் தமது பிரதேசங்களிலேயே தமது குடும்பங்களை விட்டுவிட்டு, தொழிலுக்காக இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தனரேயொழிய, அவர்கள் குடும்பமாக இங்கு வாழவில்லை. தொழிலுக்காக இடம் பெயர்ந்து வந்த சிங்களவர்கள் தனிமனிதர்களாக இப்பிரதேசத்தில் இருந்தனரேயொழிய, ஒரு சிங்கள சமூகம் இப்பிரதேசத்தில் என்றுமே வாழவில்லை. ஆனால் அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் பின் இப்பிரதேசத்தில், ஒரு சிங்கள சமூகம் நிரந்தரமாக வாழத் தொடங்கிவிட்டது.




இன்று சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தில் 1901ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது 532 தமிழர்களும் 56 முஸ்லிம்களும் 80 சிங்களவர்களும் இருந்தனர். ஆனால் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது இப்பிரதேசத்தில், 11665 சிங்களவர்களும் 7278 தமிழர்களும் 1242 முஸ்லிம்களும் இருந்தனர். எனவே 1901ஆம் ஆண்டளவில் தொழிலுக்காக தற்காலிகமாக இப்பிரதேசத்தில் வந்து குடியேறிச் சென்ற சிங்கள மக்கள், அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் விளைவாக, இப்பிரதேசத்தின் பெரும்பான்மையின மக்களாக மாறிவிட்டனர். 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி, சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மொத்த சனத்தொகையில் 57·8 சதவீதம் சிங்களவர்களாயும், 36.0 சதவீதத்தினர் தமிழர்களாயும் 6.2 சதவீதத்தினர் முஸ்லிம்களாயும் உள்ளனர். 1901ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 15 சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர்; ஆனால் 1981இல் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 160 சிங்களவர்கள் இருந்தனர். இதன் விளைவாக, அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதி சிங்களமயமாகியது.

1949 / 50 காலப்பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தின் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அல்லை, கந்தளாய் ஆகிய இரண்டு சிங்களக் குடியேற்றத் திட்டங்களின் விளைவாக சேருவல (382ச. கி. மீற்றர்), கந்தளாய் (337 ச; கி. மீற்றர்) என, இரண்டு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய சேருவல கந்தளாய்ப் பிரதேசங்களில் 1901 ஆம் ஆண்டுக் குடிசனமதிப்பீட்டின்படி 622 தமிழர்களும் 114 முஸ்லிம்களும் 97 சிங்களவர்களும் இருந்தனர். ஆனால் 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இப்பிரதேசத்தில் 9279 தமிழர்களும் 5565 முஸ்லிம்களும் 42871 சிங்களவர்களும் இருந்தனர். இதன்படி 1901இல் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 9 சதவீதமாக மட்டுமே (இது மீன்பிடித் தொழிலுக்காக தற்காலிகமாக குடியேறியிருந்த சிங்களவர்களையே குறிக்கின்றது) இருந்த சிங்களவர்கள் தொகை 1981இல், 74 சதவீதமாக அதிகரித்து, இப்பிரதேசத்தின் பெரும்பான்மையினமாக மாறிவிட்டனர். இதன்படி 1901இல் இப்பிரதேசத்தில் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 15 சிங்களவர் இருந்தனர். ஆனால் 1981இல், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 462 சிங்களவர்கள் உள்ளனர். இதன் விளைவாக திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதி முழுவதும் சிங்களமயப்படுத்தப்பட்டது. இவ்வாறு அல்லை, கந்தளாய்க் குடியேற்றத் திட்டங்கள் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 27 சதவீதமான நிலப்பரப்பு சிங்களமயப்படுத்தப்பட்டது.

சி. வரதராஜன்

# இந்தியாவின் வல்லாதிக்க உள்நோக்கமும் தலைவரின் தீர்க்கதரிசனமும்!

1983 ஆம் ஆண்டு.

ஈழத் தமிழரைப் பொறுத்தவரை அது கண்ணீரின் ஆண்டு. தென்னிலங்கையில் கொல்லப்பட்ட 3000இற்கும் மேற்பட்ட தமிழர்களின் துயரக் கதைகளுடன், தங்கள் தாயகத்திற்கு அகதிகளாக வந்த பல்லாயிரம்பேரின் சோகக் கதைகள், ஒவ்வொரு தமிழனின் வீட்டிலும் பரிமாறப்பட்ட ஒரு துயர ஆண்டு.

இரத்தமும் - சோகமும்; கோபமும் - பழிவாங்கும் உணர்வும் ஒன்றாகக் கலந்ததால் தமிழரின் மன அரங்கில் ஒரு கருத்துப் பூகம்பம் நிகழ வித்திட்ட ஒரு வரலாற்று ஆண்டு.

சாந்தி, சமாதானம், சகிப்புத்தன்மை என்ற குணங்களை பேறுடைச் சொத்தாக வைத்திருந்து - அது காரணமாக தமக்குள் பெருமைப்பட்டுக்கொண்டிருந்த ஈழத் தமிழினத்தின் கருத்துப் பெட்டகத்திற்குள், ''சக்லகலொறி'' புகுந்த ஆண்டு அது.

கொழும்பு மாநகரத்தில் தமிழரின் கட்டடங்களுக்கு சிங்கள வெறியர்கள் மூட்டிய நெருப்பு அணைந்துகொண்டிருந்த அதேவேளை, தமிழ் இளைஞர்களின நெஞ்சுக் கூட்டுக்குள் விடுதலைக் கனல் மூண்டெரிந்த ஆண்டு அது.



மூண்ட கனலுக்கு 'இந்திய அரசின் ஆதரவு' என்ற காற்று ஒட்சிசனைக் கொடுத்தது. மனங்கொள்ளா நம்பிக்கையுடன் எல்லாத் தமிழர்களிடமும் ஒரே கருத்துத்தான் அப்போது இருந்தது. 'இந்தியா எங்களுக்கு உதவும்', 'தமிழீழத்தை உருவாக்கித் தரும்' என்பதுதான் அது. இந்தக் கருத்தை நிலைநிறுத்துவது போலத்தான் எல்லாமே நடந்தன. இந்திய பத்திரிகைகள் அனைத்தும் 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து எழுதின. சிங்கள அரசை - அதன் ஒடுக்குமுறையை - விலாவாரியாக அவை கண்டித்தன. இந்திய அரசியல் தலைவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் கனல் பறக்கும் அறிக்கைகளை வெளியிட்டனர். வார்த்தைகளுடன் நின்றுவிடாமல் ஈழத்தமிழர்களுக்குச் சார்பாக இந்தியா செயலிலும் இறங்கியது.

போராளிகளுக்கு இராணுவப் பயிற்சியும் - ஆயுதங்களும் வழங்கியது. தள உதவிகளையும் - பொருள் உதவிகளையும் செய்தது. தமிழ்நாட்டில் தங்கியிருந்த ஈழத் தமிழர்களையும் - போராளிகளையும் மதிப்புக்குரிய விருந்தினராக நடாத்தியது. இதனால் எமது மக்கள் மட்டுமல்ல எமது போராளிகளும், இந்தியாவைத் தமது தந்தையர் நாடு போன்றே மதித்தனர். ஈழத் தமிழர்களின் கண்களுக்கு அப்போது இந்திரா காந்தி அம்மையார் ஒரு மீட்பராகவே தோற்றமளித்தார்.

அரசியல் விமர்சகர்களும், தீர்க்கதரிசனங்கள் கூறும் அரசியல் ஞானிகளும் ''தமிழீழத்தை உருவாக்கிக் கொடுக்கவே இந்தியா பாடுபடுகின்றது'' எனப் பேசினர்; எழுதினர். இதற்கு நியாயம் சேர்ப்பதற்காக பங்களாதேசை உதாரணம் காட்டினர். 'மேற்குலகு சார்பாக இருந்த இலங்கைத் தீவை இரண்டாக உடைத்து விடுவது இந்திய நலனுக்கு அவசியமானது' என, பனிப்போர் காலத்து உலக ஒழுங்கை கேள்வி - மறுமொழியின்றி ஒரு அளவுகோலாக எடுத்து, தமிழீழக் கோரிக்கையை நிறுத்துப் பார்த்து முடிவு சொன்னார்கள். ''இந்தியப் படைகள் ஈழம் வரவேண்டும்'' என, தமிழ் அரசியல்வாதிகளும் தம்பங்கிற்கு விழுந்து விழுந்து அழைப்புகள் விடுத்தனர். அந்த நாளைக் காண மக்களும் ஆவலாக இருந்தனர். இவ்விதம் எமது மக்கள் - போராளிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும், தமிழீழத்தை உருவாக்கித்தர இந்தியா முயலப்போகின்றது என்றே மனப்பூர்வமாக நம்பினர்.

1983 இன் இறுதிப் பகுதி.

வட இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில், குளிர் உறையும் ஒரு மலைச் சாரலில் ஒரு பயிற்சிமுகாம் இருந்தது. அது வேறு யாருடையதுமல்ல; புலிவீரர்களின் பயிற்சி முகாம். அங்கே பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தவர்கள் இந்தியப் புலனாய்வுத்துறையால் சேர்ந்தெடுக்கப்பட்ட, இந்திய இராணுவ அதிகாரிகள். எமது மூத்த தளபதியான கிட்டண்ணா உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இராணுவப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். அந்தப் பயிற்சி முகாமின் பிரதம அதிகாரியாக இருந்தவர் இந்திய இராணுவத்தின் ஒரு கேணல் ஆவார். நோயால் அல்லது பயிற்சிக் களைப்பால் போராளிகள் துய



ரும்போதெல்லாம் அருகில் வந்து வாஞ்சையுடன் உதவிபுரியும் அந்தக் கேணல், ஒரு அன்பு நண்பனைப் போலவே செயற்பட்டு போராளிகளைக் கவனிப்பார். இதனால் போராளிகளின் அதீத மதிப்பிற்கும் அன்பிற்கும் அந்த 'கேணல்' உள்ளானார். கிட்டண்ணா அந்தக் கேணலுடன் முழு நட்புரிமையுடன் பழகினார். பயிற்சி முடியும் காலம் வந்தது. கேணலைப் பிரியப்போவதை நினைத்து போராளிகள் கண்கலங்கினர். அதற்கும் மேலாக கிட்டண்ணா அக் கேணலின் மடியில் வீழ்ந்து - அழுது, பிரிவுத் துயரைப் போக்க முனைந்தார். இறுதியில் பிரிந்தார்கள். புகைவண்டி ஏறிய எமது போராளிகள் சென்னை வந்து சேர்ந்தார்கள். அங்கே தலைவரைச் சந்தித்தனர். அப்போது அந்த இராணுவ கேணலின் நல்ல மனதுபற்றியும் பிரியாவிடையின்போது கிட்டண்ணா உட்பட பல போராளிகள் அழுது பிரிந்த செய்தியையும் தலைவரிடம் சொன்னார்கள்.

அதைக்கேட்டு சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, அவர்களை நோக்கியபடி தலைவர் கூறினார்...

"நாங்கள் ஒரு நோக்கத்திற்காகப் பயிற்சி எடுக்கப் போனோம்; அவர்கள் (இந்தியா) வேறு ஒரு நோக்கத்திற்காகப் பயிற்சி தந்திருக்கின்றார்கள். எங்களுடைய நோக்கத்திற்கு எதிராக என்றோ ஒரு நாள் அவர்களுடைய இராணுவம் திரும்பினால், இதே கேணலுடன் சண்டை பிடிக்கும்படி கிட்டுவுக்கு நான் உத்தரவிடுவேன்; இட்டுவும் சண்டைபிடித்தே ஆகவேண்டும்."

தலைவரின் இந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டு கிட்டண்ணா உட்பட ஏனைய போராளிகள் திகைத்தனர். 'இந்திய இராணுவம் எங்களுக்கு உதவுமே அல்லாது எங்களுடன் ஏன் போரிடப் போகின்றது?' என்றே அனைவரும் எண்ணினர்; அதனால்தான் தமது திகைப்பைவெளிப்படுத்தினார். கிட்டண்ணா எண்ணியது போலவே அப்போதிருந்த பழம்பெரும் அரசியல் ஞானிகளும், இராஜதந்திரிகளும் மதிப்பிட்டிருந்தனர் அதையே எமது மக்களும் நம்பினர். ஏனெனில் புறநிலைமை அப்படி எண்ணும்படிதான் இருந்தது.

ஆனால், தலைவர் அப்படியான ஒரு கோணத்தில் இந்தியாவையும் அதன் உதவிகளையும் பார்க்கவில்லை. 'எமது போராட்டத்தை இந்தியா எப்படி நோக்குகின்றது? அதை எப்படி தனது நலனுக்காக

## இந்தியாவின் வல்லாதிக்க உள்நோக்கமும்...

பயன்படுத்தத் திட்டமிடுகின்றது?' என்பதை தலைவர் ஏற்கெனவே சரியாக இனங்கண்டிருந்தார். இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய நலனையும், அந்த நலனை அடைவதற்காக தமிழீழ விடுதலைப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்த முனையும் நாசகாரத் திட்டத்தையும், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த போராளிகள் மறுத்தால் தனது படைபலத்தைப் பயன்படுத்தியாவது சாதிக்கமுனையும் வல்லரசுத்தனத்தையும், மற்றெல்லாரையும்விட தலைவர் மிகச் சரியாகவே மதிப்பிட்டிருந்தார். இந்தியாவைப் பொறுத்தவரை விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் நோக்கமும் இருந்திருக்கவில்லை; 'தமிழீழம்' அமையவேண்டும் என்ற ஆசையும் இருந்திருக்கவில்லை; அதனிடம் இருந்ததெல்லாம் தனது நலனும் அதை அடையமுயலும் சதித்தனமான வழிமுறைகளும்தான். அதேவேளை, இந்திய சதி அரசியலைமறைப்பதற்காக எடுத்த 'மனிதாபிமான உதவி', 'தார்மீக ஆதரவு' என்ற வேடங்களையும் அவர் இனங்கண்டதுடன், அதை முடிந்தவரை எமது போராட்டத்திற்குச் சார்பாகப் பயன்படுத்தும் தந்திரோபாயத்தையும் தலைவர் வகுத்தே வைத்திருந்தார்.

இந்தியாவின் இந்த சூட்சும அரசியலையும் எமது தந்திரோபாய நிலைப்பாட்டையும் எடுத்து விளக்குவதற்கே, தலைவர் அவ்வாறு கூறியிருந்தார். அதேவேளை தனிப்பட்ட ஒரு இராணுவ அதிகாரியின் நல்ல பண்புகளை மனதில் வைத்தபடி, அவர் அங்கம் வகிக்கும் அந்த இராணுவத்தின் அரசியல் அபிலாசைகளை மதிப்பிட்டுவிடக்கூடாது என்பதுடன், மனிதாபிமானத்தையும் சூட்சும அரசியலையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பியபடி அரசியல் நிலைவரத்தை மதிப்பிட முனையவும் கூடாது என்ற அரசியல் பாடத்தை, அந்தச் சம்பவத்தின் வாயிலாகப் போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் தலைவர் உணர்த்த முயன்றார்.

இந்தக் காலகட்டத்தில், இதேபோன்று வேறொரு சம்பவம் நடந்திருந்தது.

அதாவது, இந்திய அரசு எமது இயக்கத்திற்கு ஒரு தொகை ஆயுதத்தைத் தந்து, இதேபோன்று மீண்டும் தருகின்றோம் என்று கூறியபோது அகமகிழ்ந்த எமது தளபதிகளையும் மூத்த உறுப்பினர்களையும் பார்த்து தலைவர்,

''நாங்கள் வெளியிலிருந்து ஆயுதங்களை இரகசியமாகக் கொள்வனவு செய்ய உடனடியாகவே ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார். 'இந்தியாவே ஆயுதத்தை எமக்கு வழங்குகின்றபோது, பின்னர் ஏன் நாம் ஆயுதங்களைக் காசு கொடுத்து வாங்கவேண்டும்?' என்ற எண்ணம் எமது மூத்த உறுப்பினர் பலருக்கு ஏற்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய ஒரு அமைப்பை தனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியச் செய்விக்கவும், அந்த அமைப்பின் பலம் தன்னில் தங்கியிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்துடனும் இந்தியா செயற்படுகின்றது என்பதை இனங்கண்டு, அதை முறியடிப்பதற்காகவும், ஆயுத பலத்தைப் பொறுத்தளவில் எமது சொந்தக் காலில் நாம் நிற்க வேண்டும் என்ற தங்குநிலையற்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குமாகவே, தலைவர் ஆயுதங்களை வெளியிலிருந்து கொள்வனவு செய்யவேண்டும் என்று கூறினார்; கூறியபடியே செய்தார்.

அன்று தலைவர் மதிப்பிட்டபடியே எல்லாம் நடந்தது! தனது நலனை அடையும் நோக்கில் இலங்கை அரசைப் பணிய வைப்பதற்காக, தமிழரின் விடுதலைப் போராட்டத்தைப் பகடைக்காயாகப் பயன்படுத்த இந்தியா முயன்றது; போராட்ட இயக்கங்களை தன்னில் தங்கியிருக்கும் கூலிப்படையாக மாற்ற முயன்றது.

எல்லா அமைப்புக்களும் இந்தியாவின் இச் சதி அரசியலுக்குப் பலியாக புலிகள் இயக்கம் மட்டும், தலைவரின் தீர்க்க தரிசனச் செயற்பாடுகளால் தப்பிப்பிழைத்தது. இறுதியில் அன்று தலைவர் மதிப்பிட்டதுபோலவே, இந்தியப் படைகளும் தமிழீழத்தை ஆக்கிரமித்தன. அந்த ஆக்கிரமிப்பிற்கெதிராக [ இந்தியச் சிறையிலிருந்து வந்தபின் ]கிட்டண்ணையும் களத்தில் நின்றார்; ஆனால் அந்த இந்தியக் கேணல் களத்திற்கு வந்தாரா என்பது தெரியவில்லை!

ஆனால், ஒரு இராணுவ கேணலின் தனிப்பட்ட பண்புகளை [ அது உண்மையோ அல்லது நடிப்போ ]பார்த்துவிட்டு மனமுருகிக் கண்ணீர்வடித்த ஒரு மனிதாபிமானியான கிட்டண்ணையை – எமது போராட்டத்திற்கு இந்தியா உதவும் என்று அன்று மனதார நம்பி, இந்தியாவை நேசித்த கிட்டண்ணையை – இறுதியில், இந்திய அரசு வஞ்சகமாகவே கொன்றுவிட்டது!

இது ஈழத் தமிழர்களுக்கு என்றும் படிப்பினையாக விளங்கும்! ○

## மனம் தளரோம்!

போர் நிறுத்தம் தானே
பொல்லாத பனி என்று
சாக்கிழுத்து விட்டு
சரிந்து மூசி தூங்காதே!
மெதுவாக வந்தெமது
மேனியைத் தொட்டுவிட்டு
'' சுகமா தம்பி கொட்டி ?''
என்பான் ஏங்காதே!
போர்நிறுத்தம் என்று
போர்வை மாற்றி இருக்கின்றான்
வேளை பார்த்து கைவைக்க
புளுகுடனே இருக்கின்றான்
வெற்றியது எங்களுக்கே
வேகமுடன் இருக்கின்றோம்அவர்
வேரறுக்க நாஙகள் தினம்
விழிப்புடனே இருக்கின்றோம்.
போர் முடிவு பார்த்து
போகலாம் வீடென்றுயாரும் நினைக்காது
பாசறையே வீடென்போம்
பகலிரவின்றியே
பயிற்சியைத் தொடர்வோம்
போர்நிறுத்தம் முடிய
பயிற்சியை முடிப்போம்!
மாசியிலே பனி மூசும்
பயிற்சியிலே நீ மூசு!
பகை ஒதுங்க படை நடுங்க
பயிற்சியிலே நீ மூசு!
வெற்றியது எமக்குரிமை
வேறுயாருக்கது உரிமை?
வெற்றியது எமக்குரிமை
வேறுயாருக்கது உரிமை?

- திருமலைப்பிரியன்
(போராளி)

---

தடுப்புச் சுவர்களைத் தாண்டி
நீண்டுவந்த கை எதுவோ?
கேள்வி வேண்டாம்
இறுகப் பற்றிக்கொள்
''இங்குயாரும்
இனியும் அழவேண்டாம்''
ஆகா!
அது எந்தக் குரலோ?
கேள்வி வேண்டாம்
கண்ணீரைத் துடைத்துக்கொள்
அப்படியா......?
உடல் சிலிர்க்கிறதே......
ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுக்குதே......!
எதுவும் வேண்டாம்
பொறுத்திருங்கள்–
உடல் கிழியும்
கண்களில் குருதி வழியும் என -
அதே குரல் சொல்லும்.
அதனால் –
மெல்ல அடி எடுப்போம்;
நிதானமாய்ச் செயற்படுவோம்!

– அ. அமுதன்
(போராளி)

## பூநகரி படைத்தளமும் சந்திரிகாவும்

பூநகரிப் படைத்தளத்தை நீக்குமாறு வற்புறுத்தும் புலிகளின் கோரிக்கையானது, அந்த முகாமினால் மக்களுக்குப் பாதிப்பெதுவும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தை மட்டுமே கொண்டதாகும். உடலியல் ரீதியான தாக்கம் மட்டுமன்றி உளவியல் ரீதியான தாக்கமும் மக்களுக்கு ஏற்பட நாம் அனுமதிக்க முடியாது என, புலிகள் கூறுகின்றார்கள். இங்கே 'உளவியல் தாக்கம்' என்பது நீண்ட ஒரு சரித்திரப் பின்னணியைக் கொண்டது.

போக்குவரத்துப் பாதையிலிருந்து 500 மீற்றர்களுக்கு அப்பால் துருப்புக்களை நகர்த்தி நிலைகொள்ளச் செய்வதன்மூலம், மக்களுக்கும் படைகளுக்கும் இடையிலான நேரடித் தொடர்பு தவிர்க்கப்பட்டுவிடும் என, அரச தரப்பினர் சொல்கின்றார்கள். பாதைக்கு தொலைவில் படைகள் நிறுத்தப்படும்; ஆதலால் - சோதனைகள், இடையூறுகள், துன்புறுத்தல்களுக்கு இடமிருக்காது என்றும்; திருவாளர் பாலபட்டபெண்டியும், கூட வந்தவர்களும் உறுதியளிக்கின்றார்கள்.

இங்கே - சந்திரிகா அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நம்புவதா இல்லையா என்பது எமக்கு இரண்டாம் பட்சப் பிரச்சினை. அவர்கள் புதியவர்கள்; நேற்று வந்தவர்கள்; 6 மாதகாலமாகத்தான் அவர்களை எமக்குத் தெரியும். ஆனால், சிங்களத்தின் படைகளை எப்படி நாங்கள் நம்பமுடியும் ?

தனது தேசத்தின் படைகளைப் பற்றி சந்திரிகா அம்மையார் அறிந்திருப்பதிலும் பார்க்க மிகக்கூடுதலாக, தமிழர்கள் அதனைப் புரிந்து கொண்டுள்ளார்கள். சந்திரிகா அம்மையாருக்கும் அவரது படைகளுக்குமிடையிலான தொடர்பு ஆக அரையாண்டு காலமேயானது; ஆனால் தமிழ் மக்களோ, 15 வருடங்களுக்குக் குறையாத பழமை வாய்ந்த சகவாசத்தை அதனோடு கொண்டுள்ளார்கள்.

சாவும் அழிவும், பட்டினியும் கொடுமையுமாக அவர்கள் அனுபவித்த ரண வேதனை கொஞ்சநஞ்சமல்ல. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதெல்லாம் படை அதற்கு இன்னல் கொடுத்தது; பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது அவற்றைக் குழப்பிவிடும் செயற்பாட்டில் ஈடுபட்டது; போர் நிறுத்த காலங்களிலெல்லாம் அது பெரியளவில் படுகொலைகளைப் புரிந்தது. இந்த நீண்ட வரலாற்றுப் பட்டறிவு தமிழ் மக்களின் ஆழ்மனதில் விதைத்த பயப்பீதிதான், இன்னமும் அவர்களை ஆட்கொண்டுள்ளது.

இந்த மனோநிலையை எவராவது விளங்கிக்கொள்ள வேண்டுமானால், அவர்கள் தமிழர்களாகப் பிறந்திருக்கவேண்டும் !

500 மீற்றர் தூரம் ஒரு தூரமா .....? ரி. 56 துப்பாக்கியின் 7.62 1M ரவைகள் 1000மீற்றர்களுக்கு அப்பால் பாயும். ஆர்.பி.ஜி - 7 கை ஏவுகணையின் எறிகணை, 900 மீற்றர் தூரத்திலுள்ள சொல்லப்பட்ட புள்ளியில் வெடித்துச் சிதறடிக்கும்.

எமது மக்கள் நிம்மதியோடு புறப்படவேண்டும்; பீதியற்றுப் பயணம் போகவேண்டும்; ஆறுதலாக கேரதீவில் படகேறவேண்டும்; அச்ச உணர்வில்லாமல் சங்குப்பிட்டியில் தரையிறங்கவேண்டும்; பயமும், பதற்றமும் இன்றி பூநகரியைக் கடந்துசெல்ல வேண்டும். எனவே, அந்தப் பிரதேசத்திலிருந்தே படைத்தளம் அகற்றப்பட்டே ஆக வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருப்போர் - ''பயணம் போவோரைப் பிடித்து பணயமாக்கிப் பகைவன் படையெடுப்பானோ'' என்று பயந்து கொண்டிருப்பர்; பயணம் போவோர் ''தம்மைப் பிடித்து முன்னால்விட்டுக் கேடயமாக்கி, பகைவன் பின்னால் நகர்வானோ'' எனப் பயந்துகொண்டு போவர்.

எல்லாப் பயங்களும் நீங்கவேண்டுமானால் - சமாதானப் பயணம் தொடர வேண்டுமானால்- பூநகரிப் பிரதேசத்திலிருந்து படைத்தளம் அகற்றப்பட்டே ஆகவேண்டும். பொருளாதாரத் தடையும், கடல் வலயத் தடையும் நீக்கப்பட்டே ஆகவேண்டும். சந்திரிகா அம்மையார் அரசியல் தீர்வில் ஆர்வம் கொண்டுள்ளாரா? அல்லது படையியல் வழிமுறையில்தான் நாட்டம் கொண்டுள்ளாரா என்பதனை - இந்த விடயங்கள் தொடர்பாக - அவர் முடிவெடுப்பதிலிருந்து நாம் முடிவெடுக்கலாம் ! ○

# சிங்கள அரசின் பேரினவாத முகம்

கொடுத்த உறுதி மொழிகளைக் காற்றில் பறக்கவிடுவது என்பது சிங்கள ஆட்சித் தலைவர்களின் இரத்தத்தில் ஊறிவிட்ட ஒரு அரசியல் மரபு; அதனை சந்திரிகா அம்மையாரும் நிரூபித்துள்ளார்.

'போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவேன்' என்று சிங்கள மக்களுக்கு உறுதிகொடுத்தார் –

'போர் சுமத்திய பளுக்களை நீக்கி தமிழ் மக்களுக்கு ஒரு புதிய வாழ்நிலையை ஏற்படுத்துவேன்' என்று தமிழ் மக்களுக்கு உறுதி அளித்தார் –

இரண்டுமே தண்ணீரில் எழுதிய எழுத்தாயிற்று.

சந்திரிகா அம்மையாரிடமிருந்து மாற்றங்களையும், புதுமைகளையும் எல்லாரும் எதிர்பார்த்திருந்தனர். புதிய தலைமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இளந்தலைவர் என்பதுடன், மேலைநாட்டில் அரசியல் கல்வி பயின்றதால் முற்போக்கான – மனிதநேயம் நிறைந்த – அரசியல் சிந்தனையை உடையவர் என்ற நம்பிக்கையைப் பெரும்பாலானோர் கொண்டிருந்தனர். அத்துடன், வன்முறை அரசியலின் கொடூரத்தையும் – அது கொடுக்கும் மனிதசோகத்தையும் – நேரடியாக அனுபவித்த ஒரு பெண்மணி என்ற வகையிலும், சந்திரிகா அம்மையாரிடமிருந்து, மாற்றங்களையும் புதுமைகளையும் எல்லாரும் எதிர்பார்த்ததில் வியப்பில்லை.

ஆனால், 'இலவு காத்த கிளிபோல அனைவரும் ஏமாந்துவிட்டனர்.

இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும்போது, புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான சமாதானப் பேச்சு 'கோமா' நிலைக்குச் சென்றுவிட்டது. இதில் சோகம் என்னவென்றால், பேச்சின் ஆரம்பகட்டமே பயங்கரத் தோல்வியில் முடிவடைந்திருப்பதுதான். சிக்கலான அரசியற் தீர்வுத்திட்டம் பற்றிப் பேசும்போது முட்டுக்கட்டை நிலைக்கு அமைதிப்பேச்சுச் சென்றிருந்தால், அது ஜீரணித்துக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால், தமிழ் மக்களின் அன்றாட ஜீவனோபாயப் பிரச்சினை பற்றிப் பேசும்போதே 'உடும்புப் பிடியுடன்' அரசு முரட்டுத்தனமாக நிற்பது, வேதனையைத் தருகின்றது. அதேவேளை, ஈழத் தமிழர்களின் ஒரு வரலாற்றுச் சோகத்தையும் இந்தத் தோல்வி நினைவூட்டுகின்றது. அதாவது, அமைதிப் பேச்சுக்கள்மூலம் தமிழரின் அரசியல் உரிமைகளை சிங்கள அரசிடம் இருந்து பெற்றுவிடலாமா என்ற கேள்வியும், அதற்கு, 'சாத்தியமில்லை' என்ற பதிலையும்தான் இதுவரை எமது வரலாறு காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பயனாக ஈழத்தமிழர்களின் அரசியல் அந்தஸ்து ஒரு உயர்ந்த கட்டத்திற்கு வளர்ந்து சென்றுள்ளது என்பது, அனைவரும் அறிந்த உண்மை. இந்த உயர்நிலையை அடைவதற்குத் தமிழினம் கொடுத்த விலை பிரமாண்டமானது. ஆனால், தமிழர்கள் பெற்றுவிட்ட இந்த அரசியற் பலத்தை மீண்டும் அதலபாதாளத்திற்குள் தள்ளிவிடவேண்டும் என்பதிலேயே, சிறிலங்கா அரசு குறியாக இருக்கின்றது.

இராணுவப் படையெடுப்புக்கள் என்றாலும் சரி, அமைதிப் பேச்சுக்கள் என்றாலும்சரி ஈழத்தமிழர்களின் பலத்தை நசுக்கமுயலும் இருவேறு வழிகளாகவே அவற்றை அரசு நோக்குகின்றது. எனவேதான் இராணுவ வழிமூலம் அதை அடையமுயன்று, அது சரிவராமல் போகின்றது என்றவுடன் அமைதிப் பேச்சுக்கள் மூலம் அதை அடைய முயல்கின்றது; அதனாலும் முடியாமல் போகின்றது என்றவுடன் மீண்டும் இராணுவவழியைப் பயன்படுத்த முயல்கின்றது. காலம், சூழல்களுக்கு ஏற்றவகையில் மாறிமாறி இந்த இருவழிகளையும் சிங்கள அரசு கையாண்டுவருகின்றது; இப்போதும் இதுதான் நடந்துள்ளது.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே ஜனாதிபதி சந்திரிகா, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் அரசின் உயர்தலைவர்கள் இராணுவவாதம் பேசியபடியும், புலிகள் மீது அவநம்பிக்கைக் கருத்துக்களை – பொறுப்புணர்ச்சியின்றி–அள்ளிவீசியபடியும் இருக்கின்றனர்.

"மோதல் தவிர்ப்பு நேரத்தைப் பயன்படுத்தி புலிகள் கிழக்கில் பங்கர்கள் அமைக்கின்றனர்" என சில கொழும்புப்பத்திரிகைகள் குட்டையைக் குழப்ப விரும்பின. "இந்தச் செய்தி தவறானது; உண்மைக்குப் புறம்பானது" என, பத்திரிகையாளர்களைக் கண்டித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிக்கையின் மை காயமுன்னர், "வடக்கில் புலிகள் பங்கர்கள் அமைக்கின்றனர்" என ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அறிக்கை விடுத்தார். பகிரங்கமாக அறிக்கைவிட்டார். இந்த மூன்று பகுதியினரினதும் முரண்பட்ட அறிக்கையை எடுத்த ஐலண்ட் பத்திரிகையின் கேலிச்சித்திர ஓவியர்,தனக்கே உரித்தான பேரினவாதப் பார்வையுடன் ஒரு கேலிச் சித்திரத்தை வரைந்துள்ளார். சிங்கள தேசத்தின் இந்த விந்தையான மனநிலையை மதிப்பிட, எங்களுக்கு எந்த அரசியல் நிபுணர்களது உதவியும் தேவையில்லையே!

பேச்சுவார்த்தையை 'சீரியசான' ஒரு விடயமாக அரசுத்தலைவரும் சரி, மற்றும் அமைச்சர்கள் – முக்கியஸ்தர்களும் சரி, எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாரும் சிறுபிள்ளைத்தனமாக அறிக்கைகளை விடுத்து, தமது அரசியல் முதிர்ச்சியின்மையையும் – பேரினவாத மனநிலையையும்தான் காட்டுகின்றார்கள்! ○

# தப்புவதில்லை!

*ஆல மரம்.*

*அதில ஒரு காகக் கூடு. வெளிப் பார்வைக்கு அது முளளும் தடியும் கொண்ட கூடு. ஆனால் உள்ளே, தும்புகளினால் ஆன மென்மை அமைப்பு! அங்கு இரண்டு குஞ்சுகள். அவற்றுக்கு இரைதேடி இமைப்பாலக் காக்கும தாய், மனிதரின் பேச்சிலே அது தாய்க்காகம்!'*

*இந்த மனித இனம், காகத்தின் மொழியில எதுவோ?*

*அந்தக் குஞ்சுகளுக்கு இப்போ சிறகு சிறிது முளைத்து, அவை தாவிப் பறக்கவும் தொடங்கி விட்டன. ஆனால் உணவுக்கு இன்னும தாயையே காத்திருக்கும்!*

*உணவு மட்டுமல்ல -*

*அறிவூட்டும் பருவமும் இப்போ தொடங்விட்டது.*

*'நாம ஓர் இனம். நாம் பகிர்ந்து கூடியாழும ஓர் இனம்' என்றெல் லாம் சொலலாமல் செய்து பழக்கும் தாய். ஒரு நாள் -*

*''இன்று நீங்கள் எதையெதை எல்லாம கண்டீர்கள்?'' எனத் தன் சறிசுகளைக் கேட்டது தாய்!*

*''ஆடு, மாடு, நாய், ஏராளமான கோழி, குஞ்சுகள், பெருந்தொகை யான மனிதர், எலலாம்!''*

*''மனிதர்களையும் பார்த்தீர்களா? சரிவரப் பார்த்தீர்களா?''*

*''ஆமாம்! எல்லாருக்கும் ஒரு விதமான முகம்!''*

*இதைக் கேட்ட தாய் ஆழ்ந்த நினைவோடு தன் குஞ்சுகளைப் பார்த்தது. அப்படியே பார்த்து நின்றது. ஏதோ முடிவுக்கு வந்த தைப் போல அவற்றின் நடுவே அது அமர்ந்து கொண்டது.*

*அதி முக்கிய இரகசியம் ஒன்றை அந்தத் தாய் தன்குஞ்சுகளுக்குக் கூறி அத்துடன் விடைபெறத் தயா ராகி நின்றது.*

*''எங்கள் இனத்திற்கு உள்ள ஒரு தனிபெரும் ஆற்றல என்ன தெரி யுமா? அது எங்கள் பார்வை முறை தான!*

*- இதோ நேரே பாருங்கள்!''*

*''ஒரு மனிதன் தெரிகின்றான்'' என்றன குஞ்சுகள்!*

*''இனி இப்படிப் பாருங்கள்!'' இவ்விதம் கூறியபடி காகம் தன் கழுத்தை வெகு இலாவகமாய்த் திருப்பி, வலக்கண்ணால் மட்டும் அந்த மனிதனைப் பார்த்தது.*

*அதன் குஞ்சுகளும் அவ்விதமே தம் வலக்கண்ணால மட்டும் பார்த் தன.*

*என்ன அதிசயம்!*

*அந்த மனிதன் ஒரு பாம்பாகத் தெரிந்தான்!*

*அதே பார்வையில் இன்னொரு வன் பன்றியாய் நின்றான்!*

*எதிர்வீட்டுப் பிரமுகர் கழுகு வடி வில் இருந்தார்!*

*இவற்றைக் காட்டிவிட்டு தாய் உயரப் பறந்து போய்விட்டது!*

*குஞ்சுகள் இளம் காகங்களாய் நின்றன. எந்தத் திக்கும் அவற்றிற்கு எட்டுவதாயிருந்தது!*

*தமிழீழப் பொலிவிலே அவை வாழத் தொடங்கின!*

*ஆற்றல், அஞ்சாமை, ஈகம் உய ரிய மின விளக்குகளாய் இங்கு ஒளிர்வது தெரிந்தது.*

*குளங்கள் தெரிந்தன. அங்கு கொக்கும் வெண் மலரும் மீனினமும் தெரிந்தன. அத்துடன் - விலாங்கு களும் சில தெரிந்தன!*

*இன்னொருபுறம், ஒப்பற்ற தள பதிகள் தெரிந்தனர்; தன்னிகரில் லாத் தலைவனும் தெரிந்தான். இவர் களின் இடையே - மறைவாக- என்ன?*

*ஒரு கறுப்பு இரேகையின் அடிச் சுவடா? பகைவனுக்குத் தன்னை விற்ற கயமையின செயற்பாடா? பகைவர் முயலும் ஒரு துரோக ஊடு ருவற் திட்டமா?*

*எம் தேசிய ஆன்மாவை தக்க தருணம் பார்த்து அழிக்க வகுக்கும் நச்சுச் சதியா?*

*இதற்கான திட்டங்கள், தொடர்பு கள், குறித்த நாள் நேரங்கள் எல் லாம் வந்தன! வந்தன! ஆனால்-*

*ஆனால் -*

*அவர்கள் எண்ணிய செயல்தான் எதிர்மாறாய் ஆயின!*

*காரணம், அந்தத் தீட்சண்யப் பார்வை! அதனிலும் பல்லாயிரம் மடங்கு வலிமை கொண்ட படைத் துறைப் பார்வை! ஈழத் தமிழினத் தின் அசையாத உறிதிப்பாடு!*

*மீண்டும் காக்கைகள் ஒரு தூரத்து வெளியைச் சுற்றி வட்டமிட்டுக் கரைகின்றன! நடுவே சுடுபட்டுக் கிடக்கும் ஒரு பிணம்!*

*அங்கு அந்த இளம் காக்கைகள் இரண்டும் தாயை இனங்கண்டு கொள்கின்றன.*

*''அம்மா, இந்தப் பிணத்தை இனி நாங்கள் தின்னலாம்தானே?''*

*''இல்லையில்லை! இங்கு நாங் கள் கரையவும் இல்லை, இரங்கவும் இல்லை! இந்த உடலைப் பார்த்து ஏளனம் செய்கிறோம்!''*

*''ஏன், நாங்கள் இதை உண்ண லாம் தானே?''*

*''வேண்டவே வேண்டாம்! இது தன் இனத்தைக் காட்டிக்கொடுக்க முனைந்த பச்சைத் துரோகியின் நச்சு உடல்!''*

*''அப்போ எப்படிச் சுடப்பட் டான்?''*

*''பச்சைத் துரோகிகள் இங்கு தப்புவதே இல்லை!''*

*''இருந்தும் இதனை நாம் உண்ண லாம் தானே?''*

*''கூடாது! இந்த நச்சு உடல் எம் அலகில் பட்டுவிடவே கூடாது!*

*''ஏன்?''*

*''நாம் ஓர் ஒத்த இனமாய் வாழ் பவர் என்பதால்.''*

– நாக. பத்மநாதன் ○

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்